# அரசு ஊழியர்

## மாத இதழ்

**2024 செப்டம்பர்**

**மலர் : 45 இதழ் : 9**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**
ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

இதழ் வடிவமைப்பு: சிவன்யா கிராபிக்ஸ் 9940147811

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**
**சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
19/1 - 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002
ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **UPS-பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு இணையானதுமல்ல மேம்படுத்தப்பட்டதுமல்ல**
   *தலையங்கம்* ....... 4
2. **வேலை வாய்ப்புகளை உருவாக்காத பொருளாதார வளர்ச்சி சமூக மற்றும் அரசியலில் கிளர்ச்சி ஏற்படுத்தும்**
   *பொதுச்செயலாளர் மேசையிலிருந்து* ....... 5
3. **மனிதநேய மக்கள் பணியில். புதிய உச்சத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்** ....... 10
4. **போராட்ட அலைகள் எப்போதும் ஓய்வதில்லை** ....... 12
5. **அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய செயற்குழு கூட்டம் ஐதராபாத் 13.08.2024 – 14.08.2024** ....... 17
6. **கடமைகளும், பொறுப்புகளும் சிறியதாக இருக்கலாம்ஆனால் அவை ஒவ்வொன்றும் மிகமதிப்பு மிக்கவை!.** ....... 21
7. **பழைய ஓய்வூதியமே நிரந்தர தீர்வு!** ....... 24
8. **வாசகர் கடிதம்** ....... 29
9. **எம்ஆர்ஏ மூன்றெழுத்து மந்திரம் உச்சரித்தால் உஷ்ணம் பிறக்கும்** ....... 30
10. **கொல்கத்தா முதுநிலை மருத்துவ மாணவி படுகொலையை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்** ....... 31
11. **வட்டக்கிளை மாநாடு** ....... 34

தலையங்கம்

# UPS - பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு இணையானதுமல்ல மேம்படுத்தப்பட்டதுமல்ல

ஒன்றிய பாஜக அரசு தான் கொண்டு வந்த தேசிய ஓய்வூதிய திட்டத்திற்கு பதிலாக புதிய ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை 24.08.24 அன்று அறிவித்துள்ளது. கடந்த நாடாளுமன்ற தேர்தல் வரை தேசிய ஓய்வூதிய திட்டத்தில் எவ்வித மாற்றத்தையும் செய்ய இயலாது என ஒன்றிய பாஜக அமைச்சர்கள் பேசி வந்தனர்.மத்திய அரசு ஊழியர், மாநில அரசு ஊழியர் சங்கங்களின் இடைவிடாத போராட்டம் காரணமாக திரு.சோமநாதன் குழு அமைக்கப்பட்டது. திரு.சோமநாதன் குழு தன்னுடைய பரிந்துரையை அளித்ததின் அடிப்படையில் ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தில் 25 ஆண்டுகள் பணிபுரிந்த அரசு ஊழியர்களுக்கு அவர்கள் கடைசியாக பெற்ற 12 மாத சம்பளத்தின் சராசரியில் 50 சதவீதம் ஓய்வூதியம் வழங்குவது, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணி முடித்தால் பத்தாயிரம் மாதாந்திர ஓய்வூதி வழங்குவது, பணிக்கொடை வழங்குவது, ஓய்வூதியர் இறந்தால் 60% குடும்ப ஓய்வூதியம் வழங்குவது போன்றவை தேசிய ஓய்வு திட்டத்தை காட்டிலும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் மேம்பட்டதாக முன்வைக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்திலும் ஓய்வூதியத்திற்காக ஊழியர்களிடம் சம்பளம் பிடித்தும் உண்டு, ஓய்வூதியர் இறந்தால் குடும்ப பாதுகாப்பு நிதி நிராகரிக்கப்பட்டுள்ளது, ஓய்வூதியர்களுக்கான மருத்துவ படி உள்ளிட்ட உரிமைகள் நிரந்தரமாக பறிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தை தொகுத்து பெறுவது இத்திட்டத்தில் இல்லை , 85 வயதை கடந்தால் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவது இத்திட்டத்தில் இல்லை. ஊதிய குழுவில் ஓய்வூதியம் மாற்றப்பட மாட்டாது, இத்தகைய குறைபாடுகளை கொண்ட ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் எவ்விதத்திலும் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றாக முடியாது. தமிழ்நாட்டில் 2003 ஆண்டு புதிய ஓய்வூதிய திட்டம் கொண்டுவரப்பட்டது முதல் இத்திட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாகவும், ஜாக்டோ ஜியோ சார்பாகவும் நடத்தப்பட்ட போராட்டங்களின் விளைவாக தமிழ்நாட்டில் ஊழியர்களின் பணமும் அரசின் பணமும் தனியார் கைகளுக்கு செல்லாமல் பாதுகாப்பாக அரசிடமே உள்ளது. கடந்த அதிமுக ஆட்சியின் போது நடத்தப்பட்ட பழைய ஓய்வூதியத்தை பெறுவதற்கான போராட்டங்களை ஆதரித்து பழைய ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசை திராவிட முன்னேற்ற கழகம் வலியுறுத்தியது. கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது மிக முக்கிய தேர்தல் வாக்குறுதியாக பழைய பென்ஷன் வழங்கப்படும் என்பது திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றது. திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியில் அமர்ந்த பிறகு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டிலும், ஜாக்டோ ஜியோ மாநாட்டிலும் பங்கேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என வாக்குறுதி அளித்தார். ஆனால் இந்த அரசு அமைந்து 40 மாதங்களை கடந்த பிறகும் கோரிக்கைகளை நிறைவேற்றாதது ஊழியர்களிடையே மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

PFRDA வில் ஒப்பந்தம் செய்து ஓய்வூதிய நிதியை செலுத்திய மாநிலங்களே பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு மாற முடிவெடுக்கும் போது PFRDA உடன் எவ்வித ஒப்பந்தமும் செய்து கொள்ளாத தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு மாறுவதற்கு எவ்வித தடையும் இல்லை. பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இருந்தும் தமிழ்நாடு அரசு காலம் தாழ்த்தி வருவது ஏற்புடையது அல்ல. தொடர்ந்து இதே நிலை நீடிக்குமானால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தமிழ்நாடு அரசின் மீதான நம்பிக்கையை இழக்கும் அபாயம் உள்ளதை தமிழ்நாடு அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். தேசிய ஓய்வூதிய திட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்ய முடியாது என கொக்கரித்த ஒன்றிய பாஜக அரசே நாடாளுமன்ற தேர்தலில் சந்தித்த பின்னடைவு மற்றும் எதிர்கால தேர்தல்களை சந்திக்க வேண்டிய அச்சம் காரணமாக தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை அறிவித்துள்ளது. எனவே தமிழ்நாடு அரசும் பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான அறிவிப்பினை உடன் வெளியிட வேண்டும். தமிழ்நாடு அரசு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற தவறுமானால் பழைய ஓய்வூதிய திட்டத்தை பெறுவதற்கான ஒன்றுபட்ட வலிமையான போராட்டங்களை முன்னெடுப்போம்.

# வேலை வாய்ப்புகளை உருவாக்காத பொருளாதார வளர்ச்சி சமூக மற்றும் அரசியலில் கிளர்ச்சி ஏற்படுத்தும்

ஆகஸ்ட் 15 அன்று பிரதமர் அவர்கள் தில்லி செங்கோட்டையில் ஆற்றிய சுதந்திர தின உரை அவர் இதுவரை ஆற்றிய உரையிலேயே மிகவும் நீண்டதாகும். அந்த உரை மிகவும் ஏமாற்றம்அளிக்க கூடியதாக இருந்தது என்று பத்திரிக்கை செய்தி கூறுகிறது.

அவருடைய உரையின் பெரும்பகுதி தூய்மை இந்தியா (Swachh Bharat) துவங்கி கிராமபுறங்களில் ஒவ்வொரு வீட்டுக்கு குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் மிஷன் திட்டம், எரிசக்தியை புதுப்பித்தல், வங்கித்துறையை வலுப்படுத்துவது உட்பட பலவற்றை பேசி அவை கடந்த 10 ஆண்டு பிஜேபி ஆட்சியின் சாதனைகளாக பேசினார் இவை அனைத்தும் 2047க்குள் விக்சித் பாரத் (புதுமை இந்தியா) என்று பேசியுள்ளார்.

இவர் கூறியுள்ள சாதனைகள் என்பவற்றுக்கு எதார்த்தத்தில் பார்த்தால் எந்த அடிப்படையும் கிடையாது (உ.தா) எரிசக்தி புதுப்பித்தல் என்பதின் கீழ்வுள்ள இந்தியா இந்த துறையில் G-20 நாடுகளை விட அதிக அளவில் சாதனைகளை எட்டியிருக்கிறது என்று கூறியுள்ளார் எதன் அடிப்படையில் கூறுகிறார் என்பது தெரியவில்லை.

மூன்றாவது முறையாக ஆட்சி பொறுப்பு ஏற்றுள்ளார். புதிதாக ஏதாவது புதிய திட்டங்கள், கொள்கைகள் அறிவிப்பார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படியெல்லாம் எதுவும் இல்லை, அவர் கொடுத்துள்ள ஒரே உறுதி மொழி என்னவெனில் நாம் அனைவரும் பாரதத்திற்காக ஒரு பொற்காலத்தை நோக்கி சென்று கொண்டு இருக்கிறோம் என்கிறார்.

### வேலை வாய்ப்பு என்னாயிற்று

18-வது மக்களவை தேர்தல் நடைபெற்ற போது மிகவும் முக்கியமான பிரச்சனைகளில் ஒன்றாக இருந்தது வேலைவாய்ப்புகள் உருவாக்குவது என்பதாகும். இது தொடர்பாக பிரதமர் பேசுகையில் "இளைஞர்களுக்குஎண்ணற்ற புதிய வேலை வாய்ப்புகள் அவர்களின் வீட்டு வாசல்களில் உள்ளன" (உ.த) இதற்கு முன்பாக இளைஞர்கள் மத்திய மாநில அரசு வேலையை எதிர்பார்க்க கூடாது. சுயதொழில் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். என்று பேசியுள்ளார். ஆனால் அந்த வேலை வாய்ப்புகள் என்ன என்று அவர் குறிப்பிடவே இல்லை.

ஒன்றிய அரசாங்கம் (பிஜேபி) செய்திட்ட ஒரேயொரு விசயம் ஒன்றிய பட்ஜெட்டில் வேலைவாய்ப்பு தொடர்பான ஊக்கத் திட்டங்களை (Employment Linked Incentive Scheme) அறிவித்திருப்பதுதான் இந்த திட்டம் பொது கருவூலத்தின் ஊதியத்திலிருந்து ஒரு பகுதியை மானியத்துடன் ஓராண்டிற்கு 500 முன்னணி நிறுவனங்களுக்கு அளிக்கின்றன தொழிலாளர்கள் ஒரு ஆண்டுக்கு மட்டும் இவற்றில் பயிற்சி (Internship) என்ற பெயரில் வேலை செய்வார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள் ஓராண்டுக்கு மட்டும் வேலை செய்வார்கள். பின்னர் அவர்கள் கழற்றி விடப்பட்டு புதிதாக ஆட்கள் சேர்க்கப்படுவார்கள். இதனால் இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் எந்த வகையிலும் தீராது (உ.தா. 21-22ல் ஒன்றிய அரசில் விண்ணப்பித்தவர்கள் 1.8 கோடி பேர் இவர்களில் 38.550 பேர் மத்திய அரசில் வேலை கிடைத்திருக்கிறது.

வேலை வாய்ப்பு தொடர்பாக பிரதமர் கூறிய மற்றொரு கூற்று வேலை யின்மைக்கு தீர்வு காண உற்பத்தி துறை முக்கியமானது (Manufacturing Sector) என்று குறிப்பிட்டு விட்டு, இந்தியா ஒரு தொழிற்துறை உற்பத்தி மையமாக மாறும் நாள். வெகு தொலைவில் இல்லை என்று உறுதிமொழி அளித்திருக்கிறார். ஆனால் உற்பத்தி துறை மற்றும் தொழில்துறை, வளர்ச்சியின் சாதனை இந்த விசயத்தில் அதிக நம்பிக்கையை அளிக்கக்கூடிய விதத்தில் இல்லை அரசின் தரவுகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) யில் உற்பத்திதுறை பங்கு 2014 நிதியாண்டில் 15 விழுக்காடாக இருந்தது. இப்பொழுது 2024இல் 13 விழுக்காடாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. 2024 ஜுலை 25 அன்று மக்களவையில் எழுத்துபூர்வமாக அளிக்கப்பட்ட பதில் இது தொடர்புடைய அமைச்சர் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 50 ஆயிரம் குறு, சிறு நடுத்தர தொழில்கள் மூடப்பட்டதன் காரணமாக 3, 71, 641 வேலைகளை இழந்துள்ளன என்று கூறி யிருக்கிறார். எனவே பிரதமர் மோடி இந்தியா உலகளாவிய தொழில்மையமாக மாறிக் கொண்டிருக்கிறது என்று பேசுவது வெற்றுத் தனமானதென்று தெளிவாகவே தெரிகிறது. இந்தியாவில் 40% வேலை இல்லை, வேலை வாய்ப்பு மூலம் 10% தான் வேலை கிடைக்கிறது. மக்கள் தொகையில் 66% 35 வயதுக்குட்பட்டவர்கள்)

அதுமட்டும் அல்ல சிட்டிகுழுமம் (CITIGROUP) 2024 ஜூலை மாதம் வெளியிடபட்ட அறிக்கையின்படி வரும் 10 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்தியா 1.2 கோடி பேர் வேலை வாய்ப்புகளை உருவாக்கினால் மட்டுமே ஒவ்வொரு வருடம் வேலை தேடும் சந்தையில் நுழைபவர்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க இயலும் ஆனால் ஒவ்வொரு வருடமும் 80 லிருந்து 90 லட்சம் வேலை வாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்படுவதாக அது குறிப்பிட்டது. தன்னை விமர்சிக்கும் இந்தத்தரவுகளையும் ஏற்க மறுக்கிற அவதூறு செய்கிற மோடி அரசு இந்த புள்ளி விவரங்களையும் மறுத்தது.

2017-18 முதல் 2021-22 கால கட்டத்தில் 8 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருப்பதாக KLEMS அறிக்கையை மேற்கோள் காட்டி ஒன்றிய அரசின் உற்பத்திற்கு ஏற்ப ரிசர்வ் வங்கியால் சொல்லப்பட்டது. அப்படி என்றால் சாராசரியாக ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகள்! ஆனால் இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டியது 2017-18 முதல் 2021-22 கால கட்டமென்பது பல்வகையான நெருக்கடிகளை இந்ததேசம் சந்தித்த காலம் 2016-ல் எந்தவித முன் அறிவிப்புமின்றி அமுல்படுத்தப்பட்ட பண மதிப்பு நீக்க நடவடிக்கை பின்னர் அமலாக்கப்பட்ட ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை அதன் பின்னர் வந்த கோவிட் தொற்று இவை இந்திய பொருளாதாரத்தை மேலும் நெருக்கடிக்கு இட்டுச் சென்றது. இந்த கால கட்டத்தில் வேலை இழப்புகள் தான் ஏற்பட்டன. ஆனால் இந்த கால கட்டத்தில் 8 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக அறிக்கை சொல்கிறது. அதனை ஒன்றிய பிஜேபி அரசு உயர்த்தி பிடிப்பதும் நம்பத்தகுந்தவை அல்ல (உத) உலகில் அதிகம் இளைஞர்கள் உள்ள நாடு இந்தியா).

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் ஜுன் 2024-ல் வேலையின்மை 9.2% ஆக (மே 2024 ல் 7%) உயர்ந்துள்ளதாகச் சொல்கிறது. 2023-24 நிதி ஆண்டில் 3.7 கோடி பேர் வேலை தேடுபவர்களாக இருந்தார்கள் என்று சொல்கிறது.

இந்த அமைப்பு - வேலை தேடி சலித்துப்போய் வேலை தேடுவதை நிறுத்தியவர்களையும் கணக்கிலெடுத்துக் கொள்கிறது அதிகாரப்பூர்வ புள்ளி விபரங்கள் இதனை அங்கீகரிப்பதில்லை.

இந்தியாவில் அமைப்புச்சாரா நிறுவனத் தொழிலாளர்கள் முறைசாரா தொழிலாளர் என இரண்டு வகையினர் உள்ளனர், அமைப்புச்சாரா தொழிலாளர்

குறித்து விபரங்கள் ஆண்டுதோறும் வெளியிடப் படுகின்றன. ஆனால் முறை சாரா தொழிலாளர்ககள் என வருகின்றபோது, புள்ளி விவரங்கள் எளிதானதாக இல்லை இந்திய தொழிலாளிவர்க்கத்தின் 94% முறைசாரா துறைகளில் பணிபுரிகின்றனர், 10 ஆண்டுக்கு ஒருமுறை எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கு எடுப்பு (சென்செக்ஸ்) ஒன்றிய அரசின் புள்ளியியல் விபரங்கள் சரியான புள்ளி விபரங்கள் தரமுடியும் 2011 மக்கள் தொகை கணக்கு எடுப்புக்கு பின்பு இன்றும் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை எனவே பலவீனமான புள்ளி விவரங்களை கொண்டே ஒன்றிய அரசு வாதங்களை முன் வைக்கிறது.

நிதிஆயோக் அமைப்பின் சமீபத்திய ஒரு அறிக்கையின்படி, இந்தியாவில் ஜிக் பணிபுரிவோரின் எண்ணிக்கை 2029-30-ல் 2.35 கோடியாக உயரும். இது 2020, 21-ல் 07.7 கோடியில் இருந்து மூன்று மடங்கு அதிகம் ஊபர் நிறுவனத்தில் 10 லட்சம் பேர் இந்தியா முழுவதும் ஓட்டுநராக பணிபுரிகின்றனர். சொமாட்டோ நிறுவனத்தால் 3.5 லட்சம் பேர், டெலிவரி பார்ட்னர்களாக பணிபுரிகின்றனர், அர்பன் கம்பெனியில் 40 ஆயிரம் பேர் பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவருமே பார்ட்னர்கள் என்று அழைக்கப்படுகின்றனர், இவர்கள் அனைவருக்கும் செயல் திறன் ஏற்றவாறு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது (Perfomance Based Incentive) அது ஊதியம் என அழைக்கப்படுகிறது அவர்கள் தொடர்ந்து அந்த பணியில் தொடர வேண்டுமெனில் அவர்களுக்கு மதிப்பீடு (rating) உள்ளன. அந்த ரேட்டிங்கை தக்க வைத்து கொள்ளவில்லை என்றால் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் (உ.தா.) அர்பன் கம்பெனியில் 4.5 என்கிற ரேட்டிங்கை அவர்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் இவர்களுக்கு பணி பாதுகாப்பு கிடையாது. இந்தியாவில் கிக் பொருளாதாரம் வளரும் பொருளாதாரம் எனவும் அதனுடைய ஆண்டு வளர்ச்சி 17% இருப்பதாகவும் 2024 ஆண்டில் 455 பில்லியின் டாலர்களை கடந்து விடும் என்றும் இந்தியாவின் முதலாளிகள் அமைப்பு சொல்கிறது.

மறுபுறம் 2021-31 கால கட்டத்தில் இந்தியாவில் வேலை தேடும் வயதில் உள்ள இளைஞர்களின் (Working age Population) எண்ணிக்கை 9.7 மில்லியனாக இருக்கும் எனவும் இது சமூகத்தின் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் ஒன்றிய அரசின் பட்ஜெட் அறிவிப்புகள் இவை எவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒன்றிய அரசு அறிவித்துள்ள பயிற்சி திட்டத்தின் கீழ் முதல் முறையாக வேலைக்கு வருபவர்களுக்கு முதல் மாத ஊதியத்தை அரசே கம்பெனிக்கு கொடுக்கும் என்கிற அறிவிப்பும், பிரதமரின் 12 மாத பயிற்சித் திட்ட அறிவிப்பும் நிரந்தர வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் அதிகரிப்பதற்கும் எவ்வகையிலும் உதவ போவதில்லை மேலும் இப்பயிற்சித் திட்டம், எல்லாம ஒரு குறுகிய கால வேலை வாய்ப்புகளுக்கோ இருக்கும் இது எதிர் காலத்தில் வேலை வாய்ப்பற்றோர் எண்ணிக்கை இன்னும் அதிகரிப்பதற்கே இட்டுச் செல்லும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கை உற்பத்தி துறையில் வேலை வாய்ப்புகள் 12 லிருந்து 14 சதவிதமாக தேக்க நிலையில் உள்ளதாக எச்சரிக்கை செய்கிறது கோவிட் பிறகு வேளாண்துறை அற்ற இடங்களிலிருந்து தொழிலாளர்கள், வேளாண்துறை நோக்கி நகர்வதாகவும் கூறியது பல்வேறு அறிக்கைகளும், 2022-23ல் மொத்த தொழிலாளர் எண்ணிக்கையில் 45.76% பேர் வேளாண்துறையிலேயே பணிபுரிவதாகச் சொல்கின்றன அரசாங்கம் மட்டும் இந்த நிலையை மாற்றிவிட முடியாது தீர்வுகளை நோக்கி நகர்வுகள் வேண்டும் தொழில் நுட்ப கண்டுபிடிப்புகள் மக்களின் வேலை சுமையைக் குறைப்பதற்கே தவிர அவர்களின் வாழ்வில் தடைக்கற்களை

ஏற்படுத்துவதற்கு அல்ல. இழப்புகளை தடுப்பதற்கும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தொழிலாளர் அமைச்சகம், தொழிலாளர் நலச்சட்டங்களைத் தாண்டி நோய் தீர்க்கும் மருந்தினை யோசிக்க வேண்டும் வேளாண் உற்பத்தியை தொழில் மையமாக்குவதற்கு அரசின் முதலீட்டையும் கூட்டுறவு முதலீட்டையும் அரசுகள் கணக்கில் கொளள் வேண்டும்.

இவ்வாறு இருக்க ஒன்றிய அரசு உயர்பதவிகளில் லேட்டரல் என்டரி என்ற பெயரில் ஆர் எஸ். எஸ். காரர்களை நேரடியாக நியமிக்கும் அறிக்கையை ஒன்றிய அரசு ரத்து செய்திருக்கிறது. இடதுசாரிகள், இந்தியா கூட்டணிக் கட்சிகளின் கடும் எதிர்ப்பால் தற்காலிகமாக பின் வாங்கியிருக்கிறது. ஆனால், ஒன்றிய பணியாளர் துறை அமைச்சர் உயர் பதவிகளில் நேரடி நியமன செயல்முறைகளிலும் சமத்துவம், சமூக நிதிக் கொள்கைகளுடன், குறிப்பாக இடஒதுக்கீட்டு விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் பிரதமர் உறுதியாக இருக்கிறார், அதன் காரணமாக நேரடி நியமன விளம்பரத்தை ரத்து செய்யக் கூறியிருப்பதாகத் தெரிவிக்கிறார்.

அப்படி என்றால் ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதல் இல்லாமல் தன்னிச்சையாக மத்திய பணியாளர் தேர்வாணையம் அறி விப்பை வெளியிட்டதா அல்லது RSS-ன் அறிவுறுத்தல்படி வெளி யிடப்பட்டதா, என்று பத்திரிக்கையில் சமூக செயல்பாட்டாளர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்

2018-ல் இருந்து இதுவரை 65 பேர் ஒன்றிய அரசின் உயர் பதவிகளில் நியமிக்கபட்டிருக்கிறார்கள். அப்பொழுது எங்கே, சமூகநிதி, சமத்துவம், இட ஒதுக்கீடு இருக்கிறது?

தற்போது ரத்து செய்யப்பட்ட நேரடி நியமன அறிவிப்பில் கூட முன் திட்டமிட்ட திணிப்பிற்கான சாட்சியங்கள் கொட்டிக்கிடக்கின்றன. இதுவரை நேரடி நியமன முறையில் ஒன்றிய அரசின் பணிகளில் இருப்பவர்களும், விண்ணப்பிக்கலாம் என்று இருந்தது. ஆனால் இந்த முறை அது நீக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பின்னணி என்ன? கடந்த முறை நிதி அமைச்சரின் மருமகன் பிரதீக்தோஷி பிரதமரின் சிறப்புப்பணி அதிகாரியாக இருந்தபோது தானே, இணைச்செயலாளர் பதவிக்கு நிகரான பதவியில் நேரடி நியமனம் செய்யப்பட்டார்.

தற்பொழுது ஒன்றிய அரசு பணியில் இருப்பவர்களை, நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள்? இதுவரை நியமன செய்யப்பட்ட 65 பேரில் 35 நேரடியாகத் தனியார் துறையிலிருந்து வந்தவர்கள், அதில் ஒருவர் செபி தலைவர் மாதவிபூரிபுச் அவரது நியமனத்தின் பின்னணியை ஹிண்டன்பர்க அறிக்கை வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

ஒரு துறையின் இயக்குநராக நியமிக்கப்பட வேண்டும் என்றால் அத்துறையில் 13 ஆண்டுகள் அரசின் கண்காணிப்பின் கீழ் அரசுப் பணியாற்றிருக்க வேண்டும் துணைச் செயலாளர் என்றால் 18 ஆண்டுகள் பணியாற்றிருக்க வேண்டும் இவர்கள் தவறு செய்தால் அரசிற்கு பதில் சொல்லும் பொறுப்பு இருக்கிறது, தனியார் நிறுவனங்களில் இருந்து வருபவர்களுக்கு யார் பொறுப்பேற்பது என்ற கேள்விக்கு அரசின் பதில்கள் இல்லை, இவ்வாறு கார்ப்பரேட் கூட்டுக் களவாணித் தனத்திற்கு துணைபோகும் ஆட்சியாளர்களை அடியோடு ஒழிக்க வேண்டும்.

ஒன்றிய அரசு மட்டும் அல்ல தமிழ் நாட்டிலும் திமுக தலைமையிலான அரசு பலதுறைகளின் அவுட்சோர்சிங், ஒப்பந்தமுறை கொண்டு வந்துள்ளது குறிப்பாக மருத்துவத்துறை, நெடுஞ் சாலைத்துறை, நிலஅளவை துறை,

வேலை வாய்ப்புத்துறை, மாநகராட்சி, பேரூராட்சி நகராட்சி, கருவூலத்துறை என்று ஒவ்வொரு துறையிலும் அத்தக்கூலி முறையை கொண்டு வந்து கொண்டு இருக்கிறது. மத்திய அரசு போல் லேட்டரல் என்டரி, தமிழகத்திலும், உயர்பதவிகளில் உள்ளவர்களை, பணி ஓய்வுக்கு பின்பு, முக்கிய துறைகளில் பணிபுரிகின்றார்கள், இதற்கும் வலுவான இயக்கம் நடத்தி தடுத்திட வேண்டும்.

தமிழகத்தை சேர்ந்த 18% இளைஞர்கள், தொழில்நுட்ப துறையில், நிபுணத்துவத்தை வளாத்துக் கொள்ள விரும்புகிறார்கள். அதுமட்டுமல்ல, 60% இளைஞர்கள் தங்கள் வளர்ச்சிக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கிறது என்றும் தெரிவிக்கின்றனர்.

தங்கள் இலக்குகளுடன் 100% சீரமைத்துக் கொண்டுள்ளனர். 86% தங்களை தங்கள் சக ஊழியர்கள் மற்றும் நண்பர்களுடன் ஒப்பிட்டுக் கொள்கிறார்கள். 72% இளைஞர்கள் தங்களின் கனவுகளை நோக்கி பயணத்தை தொடர்கின்றனர். 45% இளைஞர்கள், தங்களுக்கு ஏற்படும் தோல்வி அந்த சவால்களை கடக்க தங்களை ஊக்குவிப்பதாக நம்புகின்றனர்.

இப்படிப்பட்ட கனவுகளுடன் உள்ள இளைஞர்களை ஊக்குவிக்க வேலை வாய்ப்பை உருவாகக தமிழக அரசு தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட வேண்டும். (உ.த) அரசு துறைகளில் 6 லட்சம் காலி பணியிடம்)

ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் கவனத்தில் கொள்ள வேண்டியது. முன் எப்போதும் இல்லாத சவால்கள், கனவுகளோடு தவிக்கும் இந்திய இளைஞர்கள், பல்வேறு விபரங்கள் சைபர் மீடியா ரிசர்ச் நிறுவனம் இணைந்து ஆய்வு மேற்கொண்டு உள்ளார்கள். இந்தியாவில் உள்ள 10-ல் 8, (80%) இளைஞர்களின் வெற்றிக்கு பாலின - ஏற்ற தாழ்வு மிகப்பெரிய தடையாக இருக்கிறது.

4-ல் 1 இந்தியர்கள் உருவாக்கம் தரவு பகுப்பாய்வு செய்கை நுண்ணறிவு மற்றும் இணையப் பாதுகாப்பு போன்ற புதிய துறைகளில் அதிக விருப்பம் கொண்டுள்ளனர்.

உலகளாவிய இளைஞர்கள் ஒப்பிடும் போது இந்திய இளைஞர்கள் 2 மடங்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

நிபுணர்கள் வழிகாட்டுதல் தங்கள் விருப்பங்களை ஆதரிக்கும் சக்தி வாய்ந்த கருவி என்று 49% இந்தியர்கள் நம்புகிறார்கள்.

62% இந்திய இளைஞர்கள் தங்கள் கனவுகளை அடைய, தங்கள் பொழுது போக்குகள், மற்றும் பிற ஆர்வங்களை விட்டு விடத் தயாராக இருப்பதாக இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

எனவே வேலை வாய்ப்புகளை உருவாக்காத பொருளாதார வளர்ச்சி சமூக மற்றும் அரசியல் கிளர்ச்சிகளை ஏற்படுத்தும் என்பதனை சமீபத்திய உலகளாவிய அனுபவங்கள் உணர்த்துகின்றன. நவீன தாராளமயக் கொள்கைகளை தீவிரமாக பின்பற்றுகிற ஒரு அரசால் வேலையின்மை பிரச்சனைக்கு நேர்மையான நியாயமான தீர்வினை தர முடியாது. ஒன்றிய அரசு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் யதார்த்த கள நிலவரங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை, வேலை யின்மையை களைய வேண்டும் என்கிற அரசியல் உறுதிப்பாட்டோடு, ஒன்றிய அரசு அறிவிப்புகள் செய்யப்படவில்லை, வேலை என்கிற பெயரில் ஏமாற்று வேலையை விட்டு, ஒருவரின் வேலை யின்மைக்கு மத்திய, மாநில அரசுகளுக்கு பொறுப்பும், கடமையும் இருக்கிறது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

மனிதநேய மக்கள் பணியில்...

# புதிய உச்சத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் அண்மையில் பெய்த வரலாறு காணாத மழையினால் அப்பகுதி மக்கள் அயர்ந்து தூக்கிக் கொண்டிருந்த அதிகாலை வேலையில் பெரும் நிலச்சரிவும் அதன் காரணமாக பெரிய பாறைகளுடன் மண்ணும் கலந்து வந்த வெள்ளத்தால் முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை (ம) நூல்மலை என நான்கு மலைக்கிராமங்கள் உருக்குலைந்து போனதால் நூற்றுக்கணக்கான வீடுகள், சாலைகள், பாலங்கள் வாகனங்கள் மரங்கள் என அனைத்தையும் சுருட்டி எடுத்ததால் அப்பகுதி முழுவதும் மக்கள் பசுமையான சூழலில் வாழ்ந்ததற்கான சுவடே இல்லாமல் போனது. 500க்கும் மேற்பட்டவர்கள் இறந்து போன நிலையில் 150-க்கும் மேற்பட்டோருடைய முழு உடலையும் கூட கண்டெடுக்க முடியாமல் சில உடல்பாகங்கள் மட்டுமே கிடைத்ததை கூர்ஆய்வு செய்து இறந்துபோனதாக உறுதி செய்யக்கூடிய நெஞ்சை பிளந்த செய்தியாக மாறிப்போன அவலத்தை சந்தித்துள்ளது கேரளம்.

**கடந்த காலங்களில்...**

ஒரிசாவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக....

அசாம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக...

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக...

வர்தா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக...

நிஷா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக...

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக...

இயற்கை பேரழிவின் கோரத் தன்மையின் போதெல்லாம் அரசு ஊழியர்கள் களத்தில் இறங்கி போதிய உதவிகளை செய்வதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உணவுப் பொருட்கள், மருந்து பொருட்கள், துணி வகைகள், மளிகைப்பொருட்கள் என வழங்குவதும் உண்டியல் மூலம் நிதி சேகரித்து வழங்கியும், பலமுறை அரசு ஊழியர்களின் ஒருநாள் ஊதியத்தை பிடித்தம் செய்து கொள்ள ஏதுவாக தமிழக அரசிடம் வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மனிதநேய மக்கள் பணிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. மக்களுக்கு துயரம் நேரும் போதெல்லாம் களத்தில் இருந்துள்ளோம்.

2018 ஆம் ஆண்டு கேரள மாநிலத்தில் ஏற்பட்ட பெரும் மழையின் காரணமாக ஏற்பட்ட பெரும் வெள்ள பாதிப்புக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ரூ. 23 இலட்சம் இப்போதைய கேரளா மாநில முதல்வர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்களிடம் வழங்கப்பட்டது. இந்த வரலாற்று பின்னனியில் மேற்கண்ட பெரும் பாதிப்பிற்காக மாநிலம் முழுவதும் உண்டியல் மூலம் நிதி சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேசகரம் நீட்டும்வகையில் அத்தொகை முழுவதும் கேரளா மாநிலத்திற்கு வழங்குவது என அறைகூவல் விடுக்கப்பட்டது.

**மாவட்டங்களில் மனிதநேய மக்கள் பணி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் எடுத்த முடிவினை

*மாவட்ட/ வட்டக் கிளை நிர்வாகிகள், உணர்வு பூர்வமாகவும், எழுச்சியுடனும் இப்பணிகளை மேற்கொண்டனர் என்று சொன்னால் மிகையாகாது. இப்பணி கடந்த காலங்களை காட்டிலும் துடிப்புமிக்க இயக்கமாக மக்களும் நாங்களும் வேரல்ல. மனித நேய மக்கள் பணியில் என்றென்றும் அரசு ஊழியர் சங்கம் இருக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் மாநில முழுவதும் ரூ.31,00,442 வழங்கி நமது ஊழியர்கள் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியிருப்பதின் மூலம் புதிய உச்சத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அடைந்திருக்கிறது.*

மேலும் நிதி சேகரிப்பு பணி யினை மேற்கொண்டபோது ஏராளமான புதிய அரசு ஊழியர்கள் இந்நிகழ்ச்சியை கண்டு மெய்சிலிர்த்து வியக்கும் வகையில் அமைந்ததாகவும், இப்படிப்பட்ட பணிகளை அரசு ஊழியர் சங்கம் மேற்கொள்வதை கண்டு பிரம்மித்ததாகவும், அதேநேரத்தில் ஏராளமான வட்டகிளை மற்றும் மாவட்ட மையத்தில் புதியதாக பொறுப்புக்கு வந்த தோழர்கள் மத்தியில் இப்பணி உற்சாகத்தை அளித்தாகவும் ஊழியர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றதாகவும் புதிய அனுபவத்தை தந்ததாகவும் தெரி வித்தனர். எனவே எதிர்காலத்தில் இரத்த தான முகாம், கண்தான முகாம், உடல் முழு பரிசோதனை முகாம்,.. என மனிதநேய மக்கள் பணிகளை தன்னிச்சையாக மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளும் போதுதான் நமது ஸ்தாபனம் விரிவடையும்.

**இறுதியாக..**

கடின உழைப்பும் குறிப்பிடத்தக்க தியாகமும் இல்லாமல் மாபெரும் விஷயங்கள் எதுவும் ஒருபோதும் சாதிக்கப்படுவதில்லை....

சவால்கள் எவ்வளவு பெரிதாக இருக்கிறதோ,

வெகுமதி அவ்வளவு பெரிதாக இருக்கும்

யாரென்றே அரியாத ஒருவர் அழும்போது காரணமேயில்லாமல் நம் கண்களும்

கலங்குமாயின் அதுதான் மனித நேயம்.

**– மு. பாஸ்கரன்**

**மெழுகாய் உருகி தீபமாய் ஒளி வீசுவோம்.**

**தமிழ்நாடு அரசு**
**ஊழியர் சங்கம்**
நிலம் சரிந்தாலும்
நிஜம் சரிந்தாலும்
நீதியின் பக்கம் நின்று
சமரசமின்றி
சமர்புரியும்
பேரியக்கம்...

பென்ஷன்
வேண்டுமென்றாலும்
பெண்ணியம்
காக்க வேண்டுமென்றாலும்
பெருந்திரளை
கூட்டி போர்புரியும்
இயக்கம்...

நம்
மனதின் ஈரத்தை
மெழுகாய் உருட்டி,
மனதின்
கோபத்தை
தீயாய் ஏற்றி...

மணிப்பூர்
பெண்கள் வன்கொடுமை
என்றாலும்
மல்யுத்த
வீராங்கனைகளுக்கு
நிகழ்ந்த
பாலியல் கொடுமை
என்றாலும்
களம் கண்ட
சங்கம் அழைக்கிறது...

கொல்கத்தா
மருத்துவ மாணவியின்
வன்கொடுமை
படுகொலையை
கண்டிக்க...
நீதியை நிலைநாட்ட...
பெண்கள்
நம்
கண்கள் என்பதை
ஓங்கி ஒலிக்க...

சங்கம்
அழைக்கிறது,
சங்கமிக்க
அணிதிரள்வோம்.
வரலாற்று
பதிவில்
உங்கள்
கால் தடத்தையும்
பதிக்க
தயாராகுங்கள்.
நெஞ்சின்
கனலை
அணையாமல்
வைப்போம்,
வெந்து தணியட்டும்
தீயோர் செயல்.
தீப்பொறிகளை
தீபந்தமாக்குவோம்
வாருங்கள்.

**–என். வேல்முருகன்**



# போராட்ட அலைகள் எப்போதும் ஓய்வதில்லை!

இத்தனை நாளும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடி, மலையளவு சவால்களைச் சந்தித்து, சாதித்துக்காட்டி, மேகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் மேலாக உயர்ந்து நிற்கின்ற இந்த இயக்கத்தின் முன்னோடித் தோழர்களின் "ஸ்டிராங்க் டோஸ்" ஊக்கத்தோடும், உத்வேகத்தோடும், உறுதிப் பாட்டோடும் இத்தனை நாளும் சுமந்த பொறுப்பை இன்று நான் உங்களின் முன்பாக இறக்கி வைக்க வந்திருக்கிறேன். இந்த இயக்கத்தின் ஜாம்பவான்கள் பலரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புகளும், மிகச் சிக்கலான நேரங்களில் அவர்கள் எதற்கும் சமாதானம் செய்து கொள்ளாமல் மனஉறுதியோடு எடுத்த நடவடிக்கைகளை பக்கத்திலிருந்து பார்த்து கிடைத்த அனுபவங்களும், இந்த இயக்கத்தை தெளிவான திசையில் செலுத்துவதற்கான பாதைகளைக் காட்டிய அனுபவ பாடசாலைகளாக எனக்கு இருந்துள்ளன.

ஒரு சில நேரங்களில் நம்மிடமிருந்து பொறி அகலலாம். ஆனால் அது மற்றொருவரிடத்தில் நெருப்பைப் பற்ற வைக்கலாம். என்னுடைய அரசு ஊழியர் வாழ்க்கையில், சங்க அனுபவத்தில் பல சந்தர்ப்பங்களில் பலபேர் என்னுள் இருந்த நெருப்பைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். அந்த நெருப்பை உங்களில் சிலரிடமேனும் தூண்டிவிட நான் ஒரு சிறு பங்களிப்பு செய்திருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால்... இந்த இயக்கத்திற்காக நான் ஏதோ என்னால் முடிந்த பங்களிப்பைச் செய்திருக்கிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கும். இந்த சமயத்தில் என்னிடம் இருந்த நெருப்பைத் தூண்டிவிட்டவர்களுக்கு நான் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை போராடிப் பெறுதல், போராடிப் பெற்ற உரிமைகளை காத்தல், இழந்த உரிமைகளை போராடி மீட்டல், புதிய உரிமைகளுக்காகப் போராடுதல் போன்ற பல்வேறு விதமான நோக்கங்களுக்காக துவக்கப்பட்ட அமைப்புதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். 1984 முதல் அத்தகைய நோக்கங்களுக்காக அது பல போராட்டக் களங்களோடு பயணித்து வந்திருக்கிறது. இப்போது அரசு ஊழியர்கள் துய்த்துக்கொண்டிருக்கும் உரிமைகள் இந்த அமைப்பு இல்லாமலிருந்தால் அதிகார வர்க்கத்தாலும், அரசாங்கங்களாலும் எப்போதோ சூறையாடப்பட்டிருக்கும்.

நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதோடு மட்டுமே ஒரு இயக்கத்தின் கடமை நின்று போய்விடமுடியாது. அது நிலைநிறுத்தப்படுகிறதா என்பதை கண்காணிப்பதும், நிலைகுலையும்போது தூக்கி நிறுத்துவதும்தான் ஒரு இயக்கத்தின் தலையாய கடமையாக இருக்க வேண்டும். அந்த வகையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எந்த நோக்கத்திற்காக துவக்கப்பட்டதோ அந்த நோக்கம் இன்றுவரை நிலைநிறுத்தப்பட்டு கொண்டிருக்கிறது என்பதிலும் அந்த நோக்கத்தினை நிலைநிறுத்த வடம் இழுத்த முன்னோடி போராளிகளுடன் நானும் ஒரு சிறு பங்களிப்பு செய்திருக்கிறேன் என்கிற மனநிறைவும் இந்நாளில் எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மூன்று பிரதான நோக்கங்களுக்காக தோற்றுவிக்கப்பட்டது. ஊழியர்களின் நலன்களைப் பாதுகாப்பது, பணிப்பாதுகாப்பை உத்தரவாதம் செய்வது, பணிநிலைமைகளை மேம்படுத்துவது மற்றும் சமூகத்தில் முற்போக்கான மாற்றங்களை உருவாக்கிட தனது திரட்டப்பட்ட சக்தியை பயன்படுத்துவது. இந்த

40ஆண்டுகளில் மேற்கண்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கான போராட்டத்தை சமரசமின்றி செய்து கொண்டிருக்கிறது இந்த இயக்கம். ஒன்றிய அரசு ஊழியர்களுக்கான ஊதிய மாற்றங்களைப் போல ஆரம்ப காலங்களில் 10ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்ந்த ஊதிய மாற்றத்தை மூன்றாவது நான்காவது ஊதிய மாற்றங்களில் 8 ஆண்டுகளாக (1970-1978 மற்றும் 1978-1984) தமிழக அரசு மாற்றிட நேர்ந்ததும், 1984க்குப் பின்னர் இந்த ஊதிய மாற்றம் 4 ஆண்டுகளில் அதாவது 1988ம் ஆண்டில் பெற்றதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முன்னெடுத்த சமரசமற்ற முனைப்பான போராட்டங்களால்தான் என்பதும், அதன்பின்னர் 1996ல் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டதன் காரணமாக 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையான ஊதிய மாற்றமாக மீண்டும் அது மாறியதும் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்ற இமாலய இலக்கை எட்டிப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் என்பதும், 1980களில் தமிழக அரசு ஊழியர்கள் இருந்த நிலையை மாற்றி, அவர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடுவது, உரத்து குரல் கொடுப்பது, நோக்கம் நிறைவேறும்வரை உறுதியுடன் நிற்பது என்ற தத்துவார்த்த தனித்துவத்தில் ஊழியர்களை கொண்டு வந்து சேர்த்ததும், அரசு ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக மட்டும் போராடாமல், சமூக அக்கறையுள்ள பிரச்னைகளுக்காகவும் போராடுவது, இயக்கங்கள் நடத்துவது அவற்றின் மூலம் சமூகத்தில் முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்துவது என்ற புதிய சிந்தனையையும் ஏற்படுத்தி அதன்வழி நடந்து வருகிறது. அதனால்தான் அரசு ஊழியர்கள் போராடினால் எஸ்மா டெஸ்மா போன்ற சட்டங்கள் பாயும் என்று சட்டப்பேரவையில் சூளுரை விடுத்த அரசாங்கத்தையே குப்புறத் தள்ளி மண்ணைக் கவ்வவைத்த மனஉறுதியை, மாற்றத்தை அரசு ஊழியர்களுக்கு இந்த இயக்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதன் செயல்பாட்டின் தாக்கம் தான் அரசு ஊழியர்கள் நடத்திய காலவரையற்ற போராட்டங்களில் யாராக இருந்தாலும் அவர்களை எதிர்க்கும் வலிமையை அரசு ஊழியர்களுக்கு கொடுத்திருக்கிறது.

அனைத்து அரசுத்துறை சங்கங்களும் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தினால் அரசுத்துறைகளில் பணிபுரியும் அனைவரின் உரிமைகளையும் வென்று காட்டலாம் என்பதை உணர்த்திய போராட்டம்தான் 1988ல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடத்திய போராட்டம். மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கையும் அதனை அடைவதற்கு அரசு ஊழியர், ஆசிரியர் இணைந்த வேலை நிறுத்தம் உள்ளிட்ட வலுவான போராட்டங்களால் பிற சங்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அப்போது போராட்டத்தில் இணைந்தன. 22.6.88ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கி அதன் தலைவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டதும் போராட்டம் முழுவீச்சில் முன்னேறியது. போராட்டம் தீவிரமடைந்து சென்று கொண்டிருந்த நிலையில் TNGEA போராட்டத்தில் பங்கேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு அதுவும் 4.7.88ல் போராட்ட களத்திற்கு வந்தது. தலைமைச் செயலக சங்கம், ஊர்தி ஓட்டுநர் சங்கம், அலுவலக உதவியாளர் சங்கம் ஆகியவையும் போராட்டத்தில் குதித்தன. 22.7.88ல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களால் சென்னை நகரம் முற்றுகையிடப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த தலைவர்கள் விடுவிக்கப்பட்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு பிறகு போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. அந்தப்போராட்டத்தில் உடனடி பலன் இல்லாவிட்டாலும் அனைத்து சங்கங்களும் ஒன்றிணைந்தால் அரசை நடுங்க வைக்கலாம் என்ற மிகப்பெரிய ஒற்றுமை படிப்பினையை அது கற்றுக் கொடுத்தது. அரசு ஊழியர்-ஆசிரியர்களின் போராட்ட வலிமைமை உணர்ந்த அரசியல் கட்சிகள் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் போராட்ட கோரிக்கைகளை தங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் சேர்த்துக் கொண்டன. ஆக ஒற்றுமையே அரசு ஊழியர்களின் பலம் என்கிற பாடத்தை 1988 கற்றுக்கொடுத்தது.

அதே போராட்டம் பிற சங்கங்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகளையும் மற்ற சங்கங்களை குறைகூறுவதையும் கைவிட வைத்தது. பிற சங்கங்கள் அரசு ஊழியர் சங்கத்தை விமர்சித்தாலும் அரசு ஊழியர் சங்கம் அவற்றை பெரிது படுத்தாமலோ அல்லது பொருட்படுத்தாமலோ செயல்பட்டு வருகிற போக்கை கற்றுக்கொடுத்தது. விமர்சனம் செய்பவர்களின் வாய்களை செய்கைகளின் மூலம் அடக்கப் பழகியது. விட்டுக்கொடுக்கும் மனோபாவத்தை அப்போராட்டம் கற்றுக்கொடுத்தோடு அதன்பிறகு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கவனமெல்லாம் அரசிடமிருந்து உரிமைகளை பெறுவதிலேயும் அவற்றுக்காக போராடுவதிலேயுமே மாறியது. 1988ஆம் ஆண்டு போராட்டம் கைவிட வைத்தது கொஞ்சமே, ஆனால் கற்றுக் கொடுத்தது ஏராளம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் அடிப்படை ஊழியரிலிருந்து அரசு செயலாளர்கள் வரை தமிழ்நாடு அரசாங்கத்திலிருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊதியம் பெறும் எவரும் உறுப்பினராகலாம் என்ற விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது. மேலும் அடிப்படை ஊழியர்கள் கீழ்நிலை ஊழியர்களை மேல்மட்டத்திலிருப்பவர்கள் மரியாதைக்குறைவாகவும் தரக்குறைவாகவும் நடத்தினாலோ, கடைநிலை ஊழியரின் ஊதியத்தில் அரசு வஞ்சனை செய்தாலோ அரசு ஊழியர் சங்கம் உடனடியாக எதிர்வினையாற்றும் போக்கு இயல்பானதாகவே அமைந்துவிட்ட

ஒன்றாகும். குறைந்தபட்சம் ஊதியம் பெறுபவர்களின் ஊதியத்தில் ஏற்படும் முரண்பாடுகள் அவர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கும் என்ற சிந்தனையும் அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களுக்கு உறுதுணையாகவும், ஆறுதல் கூறவும், போராட்ட வலிமையை ஊட்டவும், அரசு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் நிற்பதும், வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இந்த இயக்கம் அமைச்சுப்பணியாளர்களின் கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்காமல் அடிப்படை ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உரத்து குரல்கொடுப்பதான தோற்றத்தை உண்டாக்கியிருக்கலாம். ஆனால் அமைச்சுப் பணியாளர்களின் கோரிக்கைகளுக்காக ஒரு மாதிரியான அழுத்தமும், அடிப்படை ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக வேறு மாதிரியான அழுத்தமும் எப்போதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கொடுத்ததே இல்லை. எல்லா கோரிக்கைகளுக்கும் சரியான சமமான அழுத்தங்களே கொடுக்கப்பட்டு அரசின் கவனத்தை ஈர்த்து பிரச்னைகளுக்கான தீர்வை நோக்கி பயணிப்பதே இந்த இயக்கத்தில் இதுவரையில் நடந்து கொண்டிருக்கிறது. அது இனியும் தொடரும். அரசுத்துறை ஊழியர்களுக்கான பொது சங்கங்கங்கள் என்று சொல்லக்கூடிய இயக்கங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் மட்டும்தான் கடைநிலை ஊழியரும் மாவட்ட மாநில நிர்வாகியாக வந்து அரசு உயரதிகாரிகளுடன் நேருக்கு நேர் பேச்சு வார்த்தை மற்றும் விவாதங்களில் பங்குபெறும் உரிமையும் நிலைமையும் உள்ளது. உங்கள் அனைவருக்கும் அதை நான் சொல்லித்தெரிய வைக்க வேண்டியதில்லை. அதனால்தான் எந்த அரசாங்கமும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை புறந்தள்ளிவிட்டு அரசு ஊழியர்களுக்கு எதிரான செயல்பாடுகளில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுக்க முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் அரணாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திகழ்கிறது.

இன்றைய சூழ்நிலையில் புதிதாக அரசுப்பணியில் சேர்ந்தவர்கள் சங்கத்தின் பால் ஈர்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்ற ஒரு பேச்சு இருக்கிறது. புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கான போராட்டங்களில் பங்கு பெறும் அரசு ஊழியர்களில் பெரும்பாலானோர் பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அதாவது 2003க்கு முன் பணியில் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்ற புள்ளிவிபரமும் உள்ளது. இப்போதுள்ள தலைவர்களின் தலையாய கடமை புதிதாக பணியில் சேர்ந்திருக்கும் இளைஞர்களிடம் சங்க உணர்வையும் போராட்ட வலிமையையும் போராட்டங்கள் மூலம் நாம் அடைந்த உரிமைகளையும் தொடர்ந்து எடுத்துக் கூறி அவர்களை நம் உரிமை காக்கும் போராட்டத்தில் ஒன்றிணைக்க வேண்டும். அது சங்கத் தலைவர்களின் செயல்பாடுகள் மூலமாக வந்தால் பலமாக இருக்கும்.

இன்றைய கால கட்டத்தில் அரசுப் பணியில் சேரும் இளைஞர்கள் எல்லா விஷயங்களிலும் தங்களுக்கென ஒரு கருத்தை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அரசுப் பணிக்கு வரும்போதே ஊழியர் சங்கங்களை அரசியல் கட்சிகளுக்கு ஒப்பானதாக பார்க்கிறார்கள். அதற்காக அவர்களை குறைகூற முடியாது. இன்றைய கால சூழலில் சிலபல ஊழியர் சங்கங்கள் அரசியல் கட்சிகளைப் போல் செயல்பட்டு வரும் நிதர்சனத்தையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. சங்கத் தலைவர்களின் செயல்பாடுகளும், தளராத உறுதிகளும், தவறான காரியங்களுக்காக நிர்வாகத்தை உறுதியாக எதிர்க்கும் திறமும் அதன்மூலம் உரிமைகளை வென்றெடுக்கும் செயலுமே புதிதாக அரசுப் பணியில் சேர்ந்துள்ள இளைஞர்களை சங்கத்தின் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்கும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. சங்கம் ஊழியர்களுக்காக உண்மையாக போராடுகிறது என்ற எண்ணம் ஊழியர்கள் மத்தியில் வந்துவிட்டால் அதன்பிறகு சாரை சாரையாக அவர்களே சங்கத்தில் வந்து சங்கமித்து விடுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை இப்போதுள்ள சங்கத் தலைவர்களும் நிர்வாகிகளும் வடிவமைத்து செயலாக்கம் செய்ய வேண்டும்.

ஆட்சியாளர்கள் மக்கள் நலன் சாராத செயல்களை அளவுக்கு மீறி செய்யக்கூடிய காலகட்டங்களில் நாம் மக்களை நோக்கிய பயணம் போன்ற இயக்கங்களை முன்னெடுப்போம். அதுபோலவே அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை எவ்வளவு போராடியும் அரசாங்கம் கேளாமல் இருக்கும் காலங்களிலும் மக்கள் பிரச்சனைகளை உள்ளடக்கிய இயக்கமாக அது நடைபெறும். 2003 காலவரையற்ற போராட்டத்திற்குப் பின் 2006ல் ஒரு ஆட்சி மாற்றத்திற்காக மக்கள் பிரச்சார இயக்கம் எழுச்சியாக நடத்தப்பட்டது. அது வெற்றிகரமாகவும் அமைந்தது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய மக்களை நோக்கிய பயணங்கள் நன்றாகவே சென்றடைந்துள்ளது. அதுபோன்ற இயக்கங்களுக்கான தேவை எழும்போது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அதை முன்னெடுத்து நடத்தியுள்ளது. மக்களை நோக்கிய பயணத்தில் ஒரு செயல் திட்டமாக பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அரசுத் தேர்வுகளுக்கு தங்களை தயார் செய்து கொள்ள மாவட்டம் தோறும் இலவச தேர்வு பயிற்சி மையங்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அமைத்து நடத்தி வருகிறது. ஏற்கெனவே பல மாவட்டங்களில் இலவச தேர்வு பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை விடுபட்ட மாவட்டங்களிலும் நடத்த சங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் போராட்டங்கள் நடத்துவது பெரும்பாலும் நம் உரிமைகள் சார்ந்தே. அதை அரசாங்கத்திற்கு உணர்த்துவது எப்படி என்ற நோக்கிலேயே போராட்டங்களை வடிவமைக்க வேண்டியிருக்கிறது. மேலும் அரசுத்துறைகளில் பணியாற்றும் நம்மைப் போன்ற இயக்கத்தினர் தடாலடியாக போராட்டங்களை அறிவித்து நடத்தினால் அது மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்திவிடும் என்பதை உணர்ந்தும் மக்களுக்கு நம் மீது வெறுப்பு ஏற்படா வண்ணமும் போராட்டங்களை திட்டமிட வேண்டியிருக்கிறது. காலை நேர தர்ணா, உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம், மாலைநேர வாயிற்கூட்டம், பெருந்திரள் முறையீடு, அடையாள உண்ணாவிரதம், முற்றுகைப் போராட்டம், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம், தொடர் உண்ணாவிரதம், ஒருநாள்அடையாள வேலை நிறுத்தம் போன்ற பலதரப்பட்ட போராட்ட வடிவங்களில் மக்கள் பணிக்கு பாதிப்பு இல்லாமல் நமது கோரிக்கைகளை படிப்படியாக அரசாங்கத்தின் காதுகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டியிருக்கிறது. இத்தகைய போராட்டங்களுக்குப் பிறகும் அரசு நம்மை அலட்சியம் செய்யும்போதுதான் காலவரையற்ற வேலை நிறுத்தம் என்ற வஜ்ராயுதத்தை கையிலெடுக்க வேண்டியிருக்கிறது. காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யும் காலங்களில் காத்திருப்பு போராட்டம், சிறைநிரப்பும் போராட்டம், காலவரையற்ற உண்ணாவிரதம் போன்ற கடுமையான போராட்ட வடிவங்களை திட்டமிடுகிறோம். புதிய போக்கில் ஆயிரம் போராட்ட வடிவங்களை பரீட்சார்த்த முறையில் சங்க நிர்வாகிகள் உருவாக்கலாம். ஆனால் அவை ஊழியர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலும், அரசின் கவனத்தை ஈர்ப்பதாகவும், நடத்தை விதிகளுக்கு உட்பட்டும் இருக்க வேண்டியது அவசியம். தற்போது நாம் கையாண்டு வரும் போராட்ட வடிவங்கள் பெரும்பான்மையானவை அத்தகையவையே. புதிதாக அரசுப்பணியில் சேர்ந்துள்ள இளைஞர்கள் புறக்காரணிகளைக் கொண்டு புதுவிதமான போராட்டங்களை எதிர்பார்ப்பது நியாயம்தான். ஆனால் நடத்தை விதி என்ற குண்டுசட்டிக்குள்தான் நாம் குதிரை ஓட்ட முடியும் என்பதை முன்னணி ஊழியர்கள் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

அரசாங்கம் வேண்டுமென்றே ஏற்படுத்தும் குழப்பங்கள் அதற்கான காரணங்கள் அவற்றை சரி செய்ய வேண்டிய அணுகுமுறைகள் என்ற தேவைப்பாடுகள் எழுகின்ற போதெல்லாம் அது சம்பந்தமான தனி புத்தகங்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வெளியிட்டு வந்திருக்கிறது. குறிப்பிட்டு சொல்லப்போனால் விலைவாசி உயர்வின் போதும் ஊதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் அலுவலர் குழு, ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு அதனால் அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், வெளியிடப்பட்ட அரசாணைகளில் உள்ள முரண்பாடுகள் குறித்தும், மாநாட்டு தீர்மானங்களை ஊழியர்கள் விரிவாக தெரிந்து கொள்ளும் பொருட்டு தீர்மான விளக்கக் கையேடுகள் போன்றவற்றை அந்தந்த காலத் தேவைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வெளியிட்டு வந்துள்ளது. 'விண்ணை முட்டும் விலைவாசியும், வேதனையளிக்கும் ஊதியக்குழுவும்', 'ஊதிய மாற்றம் ஏற்றமா? ஏமாற்றமா?', 'ஊதிய மாற்றமே உடனடித் தீர்வு' போன்ற இதழ்கள் இவற்றுக்கு உதாரணம். மேலும் ஒவ்வொரு மாநாட்டிலும் வைக்கப்படும் பொதுச்செயலாளர் அறிக்கை மற்றும் ஸ்தாபன அறிக்கை போன்றவை புத்தக வடிவில் முந்தைய இரண்டு ஆண்டுகளின் உள்ளூர் முதல் உலகளாவிய நிகழ்வுகளை பித்தான் முதல் பிரபஞ்சம் வரை அலசி ஆராய்வதன் மூலம் தற்போதைய நிலை வரையிலான தகவல்கள் அரசு ஊழியர்களுக்கு சென்று சேர்ப்பதில் அரசு ஊழியர் சங்கம் ஈடுபட்டு வருகிறது. காலத்தின் கண்ணாடியாக அரசு ஊழியர் மாத இதழ் விளங்குவதாலும் அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கமும் மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை மிகப் பிரயத்தனப்பட்டு நம்முடைய அரசு ஊழியர்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டிய சிறப்பு ஏற்பாடுகள் தேவையில்லை. ஏற்கெனவே நாம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் சிறப்பாக உள்ளதால் அதை செம்மையாக தொடர்வதுடன் சங்கத் தலைவர்கள் ஊழியர்களை அவ்வப்போது நேரடியாக சந்தித்து உற்சாகப்படுத்தியும் அவர்களின் சந்தேகங்களை நேரடியாக விளக்கவும் செய்தால் ஊழியர்களிடையே சங்க உணர்வையும் உரிமை வேட்கையையும் வற்றி விடாமல் பாதுகாக்கலாம் அதை சங்கத்தின் தலைவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

கொட்டிய செங்கற்களாக இருந்த அரசு ஊழியர்களை கட்டிய மாளிகையாக கம்பீரப் படுத்திய, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உருவாக்கிய தோழர் எம்.ஆர். அப்பன் அவர்களுடன் எனக்கு நேரடிப் பரிச்சயம் இல்லை என்ற போதிலும் அரசு ஊழியர்கள் உரிமைகளுக்காக அவர் கொண்டிருந்த லட்சியம், உறுதிப்பாடு, மனவலிமை, இயக்கத்தை கட்டியவிதம், கட்டுக்கோப்பாக காத்தவிதம், அவருக்கு பின் வந்தவர்களும் இந்த இயக்கத்தை ராணுவ ஒழுக்கத்துடன் ஜனநாயக நெறிமுறைகளில் இயக்கத்தை நடத்திய பாங்கு போன்றவை... இன்னும் பிரமிப்பாகவே இருக்கிறது. பழைய அரசு ஊழியர் இதழ்களில் எம்.ஆர்.ஏ. அவர்களின் இயக்க நடவடிக்கைகளை படிக்கப் படிக்க பெரிய ஆச்சர்யங்கள் தான் மனதில் விரியும். அவருக்கு ஒப்பான ஒப்பற்ற தோழராக என்னை உத்வேகப் படுத்தியவர் தோழர் ஆர்.எம்.முத்துசுந்தரம். தோழர் எம்.ஆர்.ஏ. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற மாளிகையை உறுதியான அஸ்திவாரத்துடன் கட்டினார் என்றால் தோழர் ஆர்.எம்.எஸ்.அவர்கள் அந்த மாளிகைக்கு வண்ணப்பூச்சு செய்து ஒளிரும் விளக்குகள் போட்டு உலகையே அதை திரும்பிப்பார்க்க வைத்தவர். நானெல்லாம் இந்த மாளிகைக்கு

ஒட்டடை அடித்து பராமரிக்கிற பணியை இன்றுவரை மேற்கொண்டு வந்திருக்கிறேன். அவ்வளவுதான், இந்த இருவருடைய இன்ஸ்பிரேஷன் என்னைப்போன்ற பல முன்னணித் தோழர்களுக்கு, இயக்கத்திற்காக எந்த சவாலையும் ஏற்கும் மன உறுதியை கொடுத்திருப்பது நிஜமே. இப்போதுள்ள சூழ்நிலையில் இப்போதுள்ள நிர்வாகிகளுக்கும் தலைவர்களுக்கும் அரசு ஊழியர்கள் பெற்ற உரிமைகளை கட்டி காப்பதே பெரும் சவாலாக உள்ளது. அதனால் இருக்கிற உரிமைகளை காத்துக்கொண்டு புதிய உரிமைகளை போராடிப்பெற வேண்டிய பெரும்பொறுப்பு அவர்களின் தோள்களில் சுமத்தப் பட்டிருக்கிறது. ஒரு சங்கத்தில் அதன் நிர்வாகிகளோ தலைவர்களோ மட்டும் அந்த உணர்வைக் கொண்டிருந்தால் போதாது அதை இயக்கத்தின் கடைக்கோடி ஊழியனுக்கும் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பும் ஊழியர்களை போராட்டத்திற்கு தயார் படுத்துவதும் உரிமை வேட்கையை அவர்களுக்குள் வளர்ப்பதுமான நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே முன்னோடித் தோழர்கள் கட்டியிருக்கிற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற அற்புத மாளிகையை பொலிவோடு காக்க முடியும். இந்த இயக்கத்தில் அத்தகைய செயல் தலைவர்களும் நிர்வாகிகளும் முன்னணித் தோழர்களும் உள்ளார்கள். அவர்கள் நிச்சயம் இந்த பொறுப்புகளை தங்கள் தோள்கள் மீது சுமந்து இந்த இயக்கத்தை இன்னும் கம்பீரமாக நிலை நிறுத்துவார்கள் என்ற முழு நம்பிக்கை எனக்கு உண்டு. அத்தகைய தோழமைகளிடன் அரசு ஊழியர்களின் எதிர்காலம் பாதுகாப்புடன் இருக்கும் என்ற திட நம்பிக்கையும் எனக்கு உள்ளது. புதிய சிந்தனைகளுடன் இயக்கத்திற்கு வந்து பங்காற்றிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் செயல்பாடுகளும் ஊக்கமளிப்பதாகவே உள்ளது. அந்த மன நிறைவோடு நான் 38½ சங்க உணர்வை ஒவ்வொரு அரசு ஊழியரின் இதயத்திலும் ஏற்றி வைத்து விடைபெறுகிறேன்.

தோழர்களே உங்களுடன் பயணித்த இந்த 38½ ஆண்டுகளும் என் வாழ்நாளில் மறக்க இயலாதவை.

நான் இந்த இயக்கத்தில் சிறப்பாக செயல்படுவதற்கும் சங்க செயல்பாடுகளுக்கு இடர்ப்பாடு எழும் போது எனக்கு சரியான திசை காட்டி சங்கத்தை சிறப்பாக வழிநடத்த உதவிய என்னுடன் இத்தனை காலமும் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் பெருமைக்காகவும் உடன்நின்ற தோழர்கள் பல பேர் உள்ளனர். அவர்கள் அனைவரையும் நான் சொல்வதென்றால் இந்த இடமும் நேரமும் போதாது ஆயினும் அவர்களில் மிகச்சிலரையேனும் இந்த நேரத்தில் நினைவுபடுத்தி என்னை நானே கௌரவப் படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இந்த இயக்கத்திற்காக, எனக்காக உழைத்த பங்களிப்பாற்றியவர்களை இனி எந்த இடத்திலும் நான் பாராட்டி பெருமை சேர்க்க முடியாது. அதனால் அவர்களில் சிலருக்கு மட்டும் இந்த நிகழ்வின் மூலம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். விடுபட்டுப்போன தோழர்கள் பலபேர் இருக்கலாம் அவர்கள் அனைவரும் என்னை பெருந்தன்மையுடன் மன்னிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

**இந்த நேரத்தில் நான் ஒன்றை உங்களிடம் சொல்லிச் செல்ல விழைகிறேன். நான் ஒரு அரசு ஊழியனாக இந்த இயக்கத்திலிருந்து விடைபெறுகிறேன். ஆனால் என் வாழ்நாள் முழுவதையும் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளுக்காக பங்களித்தல், விளிம்பு நிலை மக்களை மேம்படுத்தும் செயல்பாடுகள், சமத்துவ சமுதாயத்தை நோக்கிய பயணங்களை தொடர்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதி கொண்டிருக்கிறேன்.**

**பயணங்கள் முடிவதில்லை; போராட்ட அலைகள் எப்போதும் ஓய்வதில்லை! என்னுடைய உடல்நிலையை மேம்படுத்திக் கொண்டு வேறொரு தளத்திலிருந்து அவ்வப்போது உங்களை போராட்டக் களத்தில் நிச்சயம் சந்திப்பேன்!**



என்றென்றும் தோழமையுடன்

# மு. அன்பரசு

**மேனாள்**

மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

மாநில அமைப்பாளர், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழு

உதவி பொதுச் செயலாளர், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

மாநில ஒருங்கிணைப்பாளர், ஜாக்டோ- ஜியோ மற்றும்

மாநிலத் தலைவர், தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்கம்

# அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய செயற்குழு கூட்டம், ஐதராபாத் 13.08.2024 & 14.08.2024




அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு கடந்த 13.08.2024 மற்றும் 14.08.2024 அகிய இரண்டு நாட்கள் ஹைதராபாத்தில் நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருந்து அகில இந்திய நிர்வாகிகளும், தேசிய செற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட செயற்குழுவில் கலந்துகொள்ள 12.08.2024 அன்று சென்னையில் ரயிலில் புறப்பட்டு 13.08.2024 அன்று காலை ஹைதராபத் சென்றடைந்தோம். இரயில் நிலையத்திற்கு எதிரிலேயே Quality Inn என்ற நட்சத்திர ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டோம். அதே ஹோட்டலில் நான்காவது மாடியில் உள்ள கூட்ட அரங்கில் அன்று காலை அகில இந்திய நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. அதையடுத்து மதியம் தேசிய செயற்குழுவும் ஆரம்பித்தது, கூட்டத்திற்கு அகில இந்திய தலைவர் தோழர்.சுபாஷ் லம்பா தலைமை தாங்கினார் பொதுச்செயலாளர் தோழர். ஸ்ரீகுமார் வேலை அறிக்கை வாசித்தார்

இந்த ஆண்டு உலகம் முழுவதும் சுமார் 54 நாடுகளில் தேர்தல் நடைபெற்று வருகிறது. தென்ஆப்பிரிக்காவில் ஆப்பிரிக்கன் நேஷனல் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்று கெயர் ஸ்டேமர் பிரதமாராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் அதேசமயம் ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளில் நடைபெற்ற தேர்தலில் முதலாளித்துவ கட்சிகள் வெற்றி

பெற்றுள்ளன. குறிப்பாக மெக்சிகோவில் நடைபெற்ற தேர்தலில் பெண் வேட்பாளர் கிளாடியாசெய்ன்பாம் வெற்றி பெற்றுள்ளார். பங்களாதேஷில் தொடர்ந்து நான்காவது முறையாக வெற்றி பெற்றுள்ள ஷேக்ஹசீனா அவர்கள் அமுல்படுத்திய வேலைவாய்ப்பு இடஒதுக்கீடு சட்டத்தால் தற்போது நாடு தேர்வு செய்யப்பட்ட அரசு கலைக்கப்பட்டு தற்போது இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் பொறுப்பேற்றுள்ளார். நாடு முழுவதும் தொடர்ந்து பிரச்சனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்தியாவில் நடைபெற்ற 18-வது நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் ஒன்றிய அரசு கடந்த தேர்தல் பெற்ற வாக்குகள் சதவீதம் குறைந்து பாஜக அரசு என்ற நிலைமாறி பாஜக கூட்டணி அரசு என்ற நிலையில் ஆட்சியமைத்துள்ளது. தேர்தலுக்குப் பிறகு நடைபெற்ற பட்ஜெட் என்பது முழுக்க முழுக்க கார்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான பட்ஜெட்டாக உள்ளது. 15-வது நிதிக்குழு மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதி ஒதுக்கீடு 42 -லிருந்து 41.5-மாக குறைத்துள்ளது. சுமார் 1.20 லட்சம் கோடி ரூபாய் மாநிலங்களுக்கான நிதியை குறைத்துள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத்திற்காகசெலவுசெய்யவேண்டிய Chess & Surcharge மூலம் பெறக்கூடிய தொகை ரூ.5.10 லட்சம் கோடி எந்தவொரு மாநிலத்திற்கும் வழங்கப்படவில்லை. நாடு முழுவதும் கொரானா காலத்தில் தங்களது உயிரை கொடுத்து மக்களை காப்பாற்றிய அரசு ஊழியர்களுக்கு பஞ்சப் படியை இன்றுவரை தர மறுத்து வருகிறது. பல மாநிலங்களில் பல்வேறுவகையானஊதியக்குழுக்கள் அமுல்படுத்தப்பட்டுவருகிறது. ஒருசில மாநிலங்களில் (கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா) 5 ஆண்டுகளுக்குஒருமுறைஊதியமாற்றமும், தமிழ்நாடுஅரசு உட்பட மற்ற மாநிலங்கள் மற்றும் மத்திய அரசும் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய மாற்றமும் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் வீட்டு வாடகைப் படி மற்றும் நிலுவைத் தொகைகள் வழங்கப்படுவதில்லை. 2026 ல் அமுல் படுத்தப்பட வேண்டிய புதிய ஊதிய மாற்றம் பற்றி இன்னமும் ஒன்றிய அரசு பரிசீலிக்கவில்லை. அவ்வாறு அமுல்படுத்தப்படும்ஊதியமாற்றங்களுக்கு நிலுவைத் தொகை வழங்கப்படுதில்லை. பென்சன் சம்பந்தமாக ஒன்றிய அரசு திரு. சோமநாதன் IAS தலைமையில் கமிட்டி போடப்பட்டது. ஆனால் இன்றுவரை அக்கமிட்டி அறிக்கை வெளியிடவில்லை. பாஜக ஆட்சியிலிருக்கும் கர்நாடகாவில் வேலை நேரம் 12 மணிமுதல் 14 மணிநேரம் வரை அதிகரித்துள்ளது. ஒரு சில மாநிலங்கள் தங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு Assured Pension Scheme என அமுல்படுத்தப் பட்டுள்ளது. ஆனால், நம்மைப் பொறுத்தவரை PFRDA நிதி ஆணையத்தை கலைப்பது. இவ்வாணையத்தால் வசூலிக்கப்பட்ட நிதியை அந்தந்த மாநிலங்களுக்கு திரும்ப வழங்கிட வேண்டும். பயனளிப்பு ஓய்வூதியத்தை உடனே அமுல்படுத்தப்பட வேண்டும். கடந்த தேர்தலில் வேலைவாய்ப்பின்மை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2018ல் ஜம்முகாஷ்மீரில் Man Power Supply Corporation என மாற்றப்பட்டுள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தில் வருவாய்துறை ஊழியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக தொடர் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது, ஆனால் நிரந்தரப்படுத்தப் படுவதில்லை. அம்மாநிலத்தில் ஒட்டுமொத்த சுகாதாரத்துறையும் தனியார் மயப்படுத்தப்படுகிறது. மேற்கு வங்காளத்தில் முழுமையாக சட்டஒழுங்கு சீர்கெட்டுள்ளது. சமீபத்தில் மருத்துவ

மாணவி கூட்டு பாலியல் படுகொலை என்பது எடுத்துக்காட்டாக உள்ளது. ஆனால், கேரளா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் கொரானா காலத்திற்கான பஞ்சப்படியை அம்மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது. ஆனால் ஒன்றிய அரசு தமது ஊழியர்களுக்கு வழங்காமல் ரூ.34,752 கோடியை ஊழியர்களிடமிருந்து Pick Pocket அடித்துள்ளது. இன்சூரன்ஸ் மற்றும் வங்கி ஊழியர்கள் போராடும் தன்மை கொண்டுள்ளார்கள். போராடும் தன்மை என்பது அந்தந்த அமைப்புகளின் உறுப்பினர் சேர்க்கையை பொறுத்தது. பல மாநிலங்களில் சங்கங்கள் உறுப்பினர் சேர்க்கை இயக்கங்களை நடத்துவதில்லை. சமூகவலை தளங்கள் என்பது தற்போது முக்கிய பங்கு வகிக்கிறது. 50 ஊழியர்கள் எந்த சங்கத்திலும் உறுப்பினராவதில்லை. மஹாராஷ்டிரா மாநில அரசு ஊழியர்கள் கடந்த 10 நாட்களாக வேலை நிறுத்தத்தில் உள்ளனர். அம்மாநில அரசு இன்று வரை இவர்களின் கோரிக்கைகள் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. பீகாரில் அனைத்து ஊழியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக தலைநகரில் ஒன்று கூடினார்கள். கேரளா அரசு கடந்த 8 ஆண்டுகளில் 2,05,000 புதிய வேலை வாய்ப்பு நியமனங்களை அளித்துள்ளது. தற்போதைய 2023-24 பட்ஜெட்டில் அம்மாநில அரசு ஊழியர்களுக்கு Assured Pension Scheme ஐ அறிவித்துள்ளது. மேலும், PFRDA நிதி ஆணையத்திலிருந்து தங்கள் மாநில ஊழியர்களின் நிதியை பெற போராடி வருகிறது.

இந்நிலையில் ஒன்றிய அரசு ஊழியர்களை RSS இயக்கத்தில் சேர அனுமதி அளித்துள்ளது. ஒரு ஆபத்தான அறிகுறியாகும். இன்னமும் 50 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு CPS & NPS பற்றிய விழிப்புணர்வு இல்லை. மணிப்பூரில் ஒரு Deputy Secretary அவரது அலுவலகத்திலேயே கொலை செய்யப்பட்டார் எவ்வித கேள்வியும் எழுப்பப் படவில்லை, ஏனெனில் அவர் ஒரு இந்து இல்லை. துறைவாரிச் சங்கங்களின் பிரச்சனைகளில் தலையிடுவதும், துறைவாரிச் சங்கங்கள் போராட்டங்களை நடத்துவதன் மூலம் ஊழியர்களை ஒற்றுமைப்படுத்த முடியும். இவ்வாறு பொதுச்செயலாளர் தனது அறிக்கையில், நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநில அரசுகளின் மற்றும் ஒன்றிய அரசின் கொள்கைகளையும் அதன்காரணமாக அம்மாநில அரசு ஊழியர்கள் சந்தித்துவரும் பிரச்சனைகளையும் விரிவாக தொகுத்து வழங்கினார்

தேசிய செயற்குழுவில் 21 மாநிலங்களிலிருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் பொதுச்செயலாளர் அறிக்கையின் மீதும், தங்கள் மாநிலங்களில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்தும் விவாதத்தில் கலந்துகொண்டு தெரிவித்தனர். முதல் நாள் (13.08.2024) இரவு 8.30 மணிவரை பிரதிநிதிகள் விவாதம் நடைபெற்றது. அடுத்தநாள் (14.08.2024) காலை சரியாக 9.00 மணிக்கு இரண்டாம் நாள் விவாதம் தொடங்கியது.

**விவாதங்களுக்கு இடையே பல்வேறு விதமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக.....**

- ☞ AISGEF-ல் அங்கம் வகிக்கும் அனைத்து மாநிலங்களும் கேரளா வயநாடு மழை மற்றும் நிலச்சரிவு பேரழிவுக்கு ஆதரவுக்கரம் நீட்டிட நிதி வசூல் செய்து அளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ☞ அரசியல் சாசனத்திற்கு எதிரான 01.07.2024 முதல் அமுலாக்கப்பட்டுள்ள மூன்று குற்றவியல் வழக்கு சட்டங்களை திரும்பப் பெற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ☞ ஜார்கண்ட் மாநிலத்தில் வேலை

நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள வருவாய்துறை ஊழியர்களுக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- பீகாரில் மருத்துவத்துறை ஊழியர்கள் சமவேலைக்கு சமஊதியம் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆகஸ்ட் 20 மாவட்ட தலைநகரில் ஆர்பாட்டம் உட்பட பல்வேறு போராட்டம் நடத்தி வருவதற்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- மேற்கு வங்கத்தில் மருத்துவக்கல்லூரி மாணவி கூட்டு பாலியல் கொலை செய்யப்பட்டதை கண்டித்து, குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். என வலியுறுத்தி ஆகஸ்ட் 30-ல் அனைத்து மாநிலங்களிலும் மகளிர் துணைக்குழு கூட்டங்களை நடத்திடவும், செப்டம்பர் 2 ஆம் தேதிமாவட்டத்தலைநகரில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்பாட்டம் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- 26.09.2024 அன்று புதிய பென்சன் திட்டத்தை அமுல் படுத்த வலியுறுத்தி தேசம் முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்ளிலும் உணவு இடைவேளை ஆர்பாட்டம் நடத்திடவேண்டும்.

உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**கோரிக்கைகள்:**

- புதியபென்சன் திட்டத்தை கைவிட வேண்டும்.

- மத்திய, மாநில அரசுகள் காலிப்பணி யிடங்களை உடனடியாக உரிய காலமுறை ஊதியத்தில் நிரப்பிடவேண்டும்.

- NHIS திட்ட தொகுப்பூதியம், மதிப்பூதியம், காண்ட்ராக்ட் மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

- Article 310, 311, 110 ABC குற்றவியல் சட்ட திருத்தங்களை திரும்பப் பெற வேண்டும்.

- அனைத்து வகையான ஜாதி, மத பிரி வினை வாதங்களை நீக்கவேண்டும்.

**தோழர் மு.அன்பரசு பாராட்டு விழா:**

தேசிய செயற்குழுவின் நிறைவு நிகழ்ச்சியாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் உதவி பொதுச் செயலாளராக உள்ள தோழர்.மு.அன்பரசு அவர்கள் ஆகஸ்ட் 19 அன்று பணி ஓய்வு பெறவுள்ள நிலையில் அவருக்கு பணி ஓய்வு பாராட்டு விழாவும் நடைபெற்றது. அவ்விழாவில் தோழர்.மு.அன்பரசு 40 ஆண்டு கால அரசுப் பணியில் தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களுக்கான வாழ்வாதார போராட்டங்களில் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜேக்டோ- ஜியோ அமைப்புகளின் தலைமைப் பாத்திரம் வகித்து தனது சங்கப்பணியில் முத்திரை பதித்துள்ளார் என மாநில பிரதிநிதிகள் மற்றும் அகில இந்திய பொதுச்செயலாளர் ஆகியோர் பாராட்டி பேசினார்கள். இறுதியாக ஏற்புரையில் இவை அனைத்தும் சங்கமும் நான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுமே என்னை வழிகாட்டியது என பேசிவிடை பெற்றார்

14.08.2024 அன்று மாலை 6.00 மணியளவில் தேசிய செயற்குழு முடிவடைந்து நாங்கள் அனைவரும் ஊர் திரும்ப இரயில் நிலையத்தை நோக்கி பயணித்தோம்.

**– மு. சீனிவாசன்**

# கடமைகளும், பொறுப்புகளும் சிறியதாக இருக்கலாம்;

# ஆனால் அவை ஒவ்வொன்றும் மிகமதிப்பு மிக்கவை!

என் இனிய இயக்கத்தோழமைகளுக்கு நெஞ்சார்ந்த வணக்கங்கள்!

இந்த மாபெரும் இயக்கத்தில் நான் இருப்பதற்கு காரணமாக இருந்த என்னுடைய தாய் இயக்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னோடிகளை நினைவு கூர்ந்து என்னுடைய நினைவுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

அரசுப்பணியில் 39 ஆண்டுகள் இருந்திருக்கிறேன். என்னுடைய சங்க உணர்வும். சங்கப் பணிகளும் அதில் 38% ஆண்டுகள் அடங்கியுள்ளது. இந்த 39 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் பல பொறுப்புகளில் அதாவது வட்டக்கிளை இணைச் செயலாளர் என்ற பொறுப்பிலிருந்து அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் வரை பல பொறுப்புகளில் என்னுடைய சங்கப் பணியை தொடர்ந்து செய்து வந்திருக்கிறேன். என்னுடைய தொடர் சங்கப்பணியின் விளைவாக அகில இந்திய அளவில் உள்ள நமது சம்மேளனத்தில் உதவி பொதுச் செயலாளராக பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறேன் என்பதை பெருமிதத்தோடு சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

தொடர்ந்து இயக்கப்பணிகளை செவ்வனே ஆற்றி வந்ததன் காரணமாக எங்களின் முன்னோடித் தோழர்கள் எம்.ஆர்.அப்பன். ஆர். எம். எஸ். என்று அன்புடன் அழைக்கப்படும் தோழர் ஆர். முத்துசுந்தரம் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பையும் அவர்கள் மூலம் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது அகில இந்திய அளவில் பல மாநிலங்களின் அரசு ஊழியர் இயக்கத்தின் தலைவர்கள். எழுத்தாளர்கள். அரசியல் தலைவர்கள் என இந்தியா முழுவதிலும் ஏழை எளிய நடுத்தர மற்றும் அரசு ஊழியர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும். கூட நின்று போராடும் தோழமைகளை சந்திக்கும் வாய்ப்பையும். பழகும் சந்தர்ப்பங்களையும் பெற்றுள்ளேன் என்கிற மனதிருப்தி எனக்கு உள்ளது.

அரசு ஊழியர் இயக்கத்தின் தொடர் செயல்பாடுகளை மாநில அளவிலும், அகில இந்திய அளவிலும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொண்டதன் காரணமாகவோ என்னவோ இயற்கை எனக்கு சில உடல் ரீதியான வலிகளை கொடுத்திருக்கிறது. இயக்கத்தின் நலனுக்காக ஊழியர்களின் உரிமைகளுக்காக எந்த வலியையும் பொறுத்துக்கொள்ள முடிந்த என்னால். உடல் ரீதியான வலியை பொறுத்துக்கொள்ளும் வலிமையை இந்த இயக்கம் கொடுத்துள்ளது. என்றாலும், இயக்கப் பணிகளுக்காக இருபத்தி ஐந்து

ஆண்டுகளுக்கும் மேலாக தொடர் பயணங்கள் மேற்கொண்டதன் காரணமாக உடல்நிலையை தொடர்ந்து

சீராக வைத்துக் கொள்வது சாத்தியமில்லாமல் போயிற்று. அதுவே இப்போது நான் சங்கப்பணிகளை ஆற்ற இயலாத நிலைக்கு என்னை தள்ளிவிடக்கூடிய உடல் உபாதைக்கு வித்திட்டிருக்கிறது.

நான் எப்போதும் போல் இயக்கப் பணிகளை இனிமேலும் மேற்கொள்வது என்பது என்னுடைய உடல்நிலையை கடுமையாக பாதிக்கும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளதன் காரணமாகவும். குடும்பத்தாரின் கண்ணீர்மல்கும் வேண்டுகோளின் விளைவாகவும் என்னுடைய இயக்க செயல்பாடுகளை குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உடல்நிலை. இயக்கப்பணிகளை வேகமாக எடுத்துச்செல்ல ஒத்துழைக்காத நிலையில் நான் இந்த இயக்கத்தில் உள்ள மற்ற முன்னணித் தோழர்களுக்கு வழிவிட்டு வழிகாட்டுவதுதான் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உகந்ததாக இருக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அதன் காரணமாகவே நான் என்னுடைய அரசுப்பணியிலிருந்து விருப்ப ஓய்வில் செல்லக்கூடிய முடிவை எடுத்திருக்கிறேன்.

எத்தனையோ கூட்டங்களில் பங்கேற்றிருக்கிறேன். எத்தனையோ அரங்கங்களில் பேசியிருக்கிறேன். எத்தனையோ மேடைகளில் அமர்ந்திருக்கிறேன். ஆனால் அவற்றிலிருந்தெல்லாம் முற்றிலும் மாறுபட்ட மேடையாக மாறுபட்ட நிகழ்வாக இந்த அகில இந்திய மாநில செயற்குழு கூட்டம் எனக்கு தெரிகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற கம்பீரமும், போர்க்குணமும். அஞ்சாநெஞ் சமும் கொண்ட போர்ப்படையில் தலைவராக மட்டுமல்லாமல் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் நிர்வாகியாகவும் நான் என்னுடைய கடமைகளை, சம்மேளனம் எனக்கு இட்ட பணிகளை சிறப்பாக செய்திருப்பதாகவே உணர்கிறேன். நான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவராக இருந்து கொண்டு நமது சம்மேளனத்தின் மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்தியிருக்கிறேன் என்பதில் பெருமிதம் அடைகிறேன். சிறப்பு மிக்க அந்த தருணங்களை எப்போதும் என்னால் மறக்க முடியாது. அப்படி ஒரு அகில இந்திய மாநாட்டை நடத்திட வாய்ப்பளித்த சம்மேளத்தின் முன்னோடித் தலைவர்களுக்கு எனது நன்றி.

நீங்கள் எனக்கு வழங்கிய பொறுப்பில் நான் ஓரளவுக்கேனும் செயல்பட்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால் அது எல்லாம் நீங்கள் அனைவரும் இந்த இயக்கித்தின் பாலும் என்மீதும் கொண்டிருந்த நம்பிக்கையும், மாறாத அன்பும் என்பதை நான் பெருமையுடன் நினைவுகூற கடமைப் பட்டிருக்கிறேன். நம் சங்கத்தின் முன்னோடிகளாகவும், தீர்க்கதரி சிகளாகவும் விளங்கியவர்களும், தங்கள் மறைவுக்குப் பின்னரும் வாழ்ந்துகொண்டிருக்கிற தோழர்கள் எம். ஆர்.அப்பன். ஆர். முத்து சுந்தரம் போன்றவர்களின் நேரடிக் கண்காணிப்பில்பயிற்சிபெறும்வாய்ப்பை நான் பெற்றது என் வாழ்நாளில் மறக்க முடியாத தருணங்களாகும்.

இந்திய அளவில் அரசு ஊழியர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எந்த அரசாங்கமும் எடுத்துவிட முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் இயக்கமாக, போராடிக் கொண்டிருக்கும் அமைப்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

அன்றும் இன்றும் என்றும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அது இனிமேலும் திகழும். எந்த ஒரு இயக்கமும் எந்த ஒரு தனி மனிதனையும் சார்ந்திருப்பதில்லை என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். அந்தந்த காலகட்டங்களில் அதற்கான

தலைவர்கள் தோன்றி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வார்கள் என்ற வரலாறு தொழிற்சங்க இயக்கங்களுக்கு விதிவிலக்கல்ல. நான் எனக்கிட்ட

பொறுப்பை கடமையை இறக்கி வைத்துவிட்டேன் என்பதற்காக இந்த இயக்கம் பலவீனப்பட்டு போய்விடாது. இந்த அன்பரசுவை விட வேகமும் விவேகமும் உள்ள இளைஞர்கள் யுவதிகள் பட்டாளம் நம் தேசத்தில் அரசுப் பணிகளில் இருக்கிறார்கள். நான் இறக்கி வைத்திருக்கும் பொறுப்புகளை சம்மேளனம் எனக்கிட்ட கடமைகளை தொடர்ந்து எடுத்துச் செல்ல ஆற்றலுள்ள தோழமைகள் பலபேர் நமது இயக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் இப்போதுள்ளதைவிட இந்த இயக்கத்தை இன்னும் துடிப்பாக சிறப்பாக முன்னோடிகளின் வழிகாட்டுதல்கள்படி வழிநடத்துவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குள்ளது. அந்த நம்பிக்கையோடு நான் என்னுடைய பொறுப்புகளை கடமைகளை இம்மாமன்றத்தில் உங்கள் அனைவரின் ஒப்புதலோடு இறக்கி வைக்கிறேன்.

அணி திரட்டப்பட்ட அரசு ஊழியர் வர்க்கம் உறுதிமிக்க போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் மட்டுமே நாம் நம் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் நான் அசையா நம்பிக்கை கொண்டிருக்கிறேன். கடந்த காலங்களில் யார் யாரெல்லாம் போரோடினார்களோ அவர்கள் எல்லாம் முன்னேறினார்கள். உரிமைகளைப் பெற்றார்கள். அதை நம்முடைய இயக்கம் தொடர்ந்து செய்தால்தான் நம் உரிமைகள் நம் வசப்படும். இந்த இயக்கத்தின் அகில இந்திய மற்றும் மாநில பொறுப்பாளர்கள். நிர்வாகிகள். முன்னணித் தோழர்கள் அனைவரும் போர்க்குணமிக்க போராளிகள். அவர்கள் அரசு ஊழியர் வர்க்கத்திற்கான உரிமைகளுக்காக இந்திய அளவில் எத்தகைய போராட்டத்திற்கும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் இந்த இயக்கத்தின் நன்மைக்காகவும் அரசு ஊழியர் உரிமைகளை வென்றெடுப்பதிலும் உறுதியாக செயல்பட்டு வெற்றியை ஈட்டித்தருவார்கள் என்ற பெரு நம்பிக்கையோடு நான் என்னுடைய கொடியை இங்கே நட்டுச் செல்கிறேன்.

நான் இங்கே என் கொடியை இறக்குகிறேன் என்பதால் நான் இத்துடன் என்னுடைய சமூக செயல்பாட்டை நிறுத்திக்கொண்டேன் என்று அர்த்தமல்ல. என்னுடைய உடல்நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு சமூக செயல்பாடுகளில் ஈடுபடக்கூடிய அளவுக்கு உடல் ஒத்துழைக்கும்போது கண்டிப்பாக சமூக மாற்றத்திற்கான வேறொரு தளத்தில் இருந்து கொண்டு, உரிமை மீட்புக்கான களத்தில் உங்களை அகில இந்திய அளவில் நிச்சயம் சந்திப்பேன். உங்களோடு கைகோர்ப்பேன். இந்த இயக்கத்தில் என்னுடைய கடமைகளும் பொறுப்புகளும் சிறியதாக இருக்கலாம் ஆனால் அவை ஒவ்வொன்றும் மதிப்பு மிக்கவை என்கிற மன நிறைவோடு உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் நடைபெற்ற கிமிஷிநிணிதின் அகில இந்திய தேசிய செயற்குழு கூட்டத்தில் 14.08.2024 அன்று, உதவிப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டபோது தோழர் மு. அன்பரசு தாக்கல் செய்த உரை.

என்றும் தோழமையுடன்<br>
மு.அன்பரசு<br>
மேனாள் தலைவர்<br>
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்<br>
மற்றும்<br>
உதவி பொதுச் செயலாளர்<br>
அகில இந்திய மாநில அரசு ஊழியர்<br>
சம்மேளனம்

# பழைய ஓய்வூதியமே நிரந்தர தீர்வு!

## (OLD PENSION SCHEME)

**கே.எம். தியாகராஜன்.**
**மேனாள் மாநில துணைத் தலைவர்.**

ஒன்றிய பாஜக அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் (UNIFIED PENSION SCHEME) பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையானதும் இல்லை. மேலானதும் அல்ல. பழைய ஓய்வூதியமே ஊழியர்களின் வாழ்வாதாரம் காக்கும் சிறந்த திட்டம்.பழைய ஓயவூதிய திட்டம் மட்டுமே ஊழியர்கள் பணி ஓய்வு பெறும் போது அவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் எப்படி கொடுக்க வேண்டும் என்பதை வரையறுக்கும் "வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வூதிய திட்டம் (DEFINED BENEFIT PENSION SCHEME).

புதிய ஓய்வூதியத் திட்டம் என்பது ஊழியர் பங்களிப்பு தொகை, அதை எவ்வளவு பிடித்தம் செய்வது, எப்படி பிடித்தம் செய்வது என்பதை வரையறுக்கும் (DEFINED CONTRIBUTION PENSION SCHEME) திட்டம் ஆகும். பழைய ஓய்வூதியம் என்பது வாழ்க்கை செலவோடு (Cost Index) இணைக்கப்பட்டுள்ளது. எனவே, தான் விலைவாசி உயர்வு மற்றும் ஊதிய மாற்றங்களின் போது ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படும். இந்த உத்தரவாதம் NPS ல் இல்லை. UPS யிலும் இல்லை. தேசிய ஓய்வூதியத்தை விட ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தில் பென்சன் உத்தரவாதம் கிடைக்கும் என்று அறிவித்தாலும் பழைய ஓய்வூதியத்துடன் ஒப்பீடு செய்யும்போது NPS போலவே UPS திட்டமும் போதுமானதாக இல்லை.

ஓய்வூதியம் என்பது கருணைத் தொகை அல்ல. அது சமூக ரீதியான, சட்ட ரீதியான உறுதிப்பாடாகும்.. என 1983ல் உச்ச நீதிமன்ற வழக்கில் நீதிபதி டி. எஸ். நகரா அவர்கள் தீர்ப்பு வழங்கியுள்ளார். ஒன்றிய அரசின் ஐந்தாவது ஊதியக்குழு அறிக்கையில் நீதியரசர் இரத்தின வேல்பாண்டியன் அவர்கள் இந்த கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு "PENSION IS THEIR STATUTORY, INALIENABLE, LEGALLY ENFORCEABLE RIGHT" என தெரிவித்துள்ளார்.

புதிய ஓய்வூதிய திட்டம் அறிவிக்கப்பட்ட காலகட்டத்தில் நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் என்பவர்" தொழிலாளர்களின் ஓய்வூதியத்திற்கான நிதியை தனியார் மயமாக்குவதானது அரசுக்கோ, தொழிலாளர்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய போவதில்லை மாறாக அந்நிதியை நிர்வகிக்க கூடிய நிதி மேலாளர்களையே கொழிக்க செய்யும் என தெரிவித்துள்ளார். இதை விட ஓய்வூதியத்தை தனியார் மயமாக்குவதற்கான எதிரான வேறொன்றை நமது ஆட்சியாளர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை.

புதிய ஓய்வூதியத் திட்டம் வந்த நாள் முதல் நாமும் மத்திய தர வர்க்கமும், நமக்காக தொழிலாளி வர்க்கமும், விவசாய பெருங்குடி மக்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் ஓய்வு பெற்றவர்கள் கசப்பான அனுபவங்களை, கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடிப்பதற்கு கொண்டு வரப்பட்ட இந்த பழைய ஓய்வூதியத்தை போல எந்த நன்மைகளையும் அவர்களுக்கு வழங்க வில்லை. இதன் விளைவாக அரசியல் ரீதியாக சில பின்னடைவை சந்திக்க வேண்டிய நிலை வந்துள்ளது. எனவேதான், NPSக்கு மாற்றாக UPS திட்டத்தை கொண்டு வந்து சில

மேம்பாட்டுகளுடன் புதிய வழியில் "பங்கு சந்தை முதலீடு தொடர வேண்டும் கார்ப்பரேட் நிறுவனங்கள் லாபமும் உயர வேண்டும் உத்தரவாத ஓய்வூதியமும் கொடுத்தது போல் இருக்கவேண்டும் என்பதற்காக ஊழியர்களின் பங்கு தொகையை பிடித்து கொண்டு அரசின் பங்கு தொகையை உயர்த்தி கார்ப்பரேட் நிறுவனங்களின் செல்வம் கொழிக்க வழி வகை செய்ய "ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம்" அறிவிக்கப்பட்டுள்ளது. இது எந்த வகையிலும் ஈடானதோ, மேலானதோ இல்லை என தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் எதிர்த்துள்ளது சிஐடியு, ஏஐடியுசி உள்ளிட்ட தொழிற்சங்கங்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், அகில இந்திய பாதுகாப்பு ஊழியர் சம்மேளனம், மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம், வங்கி ஊழியர் சம்மேளனங்கள், பல்வேறு அரசு ஊழியர் ஆசிரியர் அமைப்புகள் தங்களது கண்டனத்தையும் தெரிவித்து பழைய ஓய்வூதியமே சிறப்பானது அதையே நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்துள்ளன.

இந்த அறிவிப்பு வந்தவுடன் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் வருகின்ற செப்டம்பர் 26 அகில இந்திய அளவில் எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்க அறைகூவல் விடுத்துள்ளது. பஞ்சாப் மற்றும் அரியானா ஊழியர்களின் போராட்டம் வெடித்துள்ளது. இந்த அறிவிப்பை தொடர்ந்து மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநில பாஜக அரசுகள் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் கொண்டு வர அறிவிப்பு வெளியிட்டுள்ளன.

(1) தமிழ்நாடு அரசு ஏற்கனவே NPS-ல் சேராமல் CPS திட்டத்தின் மூலம் ஊழியர்களிடமிருந்து பங்கு தொகையை பிடித்தம் செய்து ஓய்வுபெற்ற பிறகு அரசின் பங்கு தொகையை வட்டியுடன் சேர்த்து தனியரிடம் எதிர்கால த்தில் ஓய்வூதியம் கோர மாட்டேன் என உறுதி மொழி பெற்று "ஒரே நேர ஓய்வூதியம்(ONE TIME SETTLEMENT SCHEME) ஆக பணப் பலன் மட்டுமே வழங்கப்படுகிறது. வேறு எந்த ஓய்வூதிய சலுகையும் வழங்கப்படாத மாநிலமாக தமிழ்நாடு உள்ளது வேதனைக்குரிய ஒன்றாகும்.

(2) ஆந்திரா வின் (GPS- GURANTEE PENSION SCHEME) உத்தரவாத ஓய்வூதியம், ஒன்றிய அரசின் (UPS- UNIFIED PENSION SCHEME) ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஆக பெயர் மாற்றம்: ஒன்றிய அரசு அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஏற்கனவே கடந்த நிதி ஆண்டில் கொண்டு வரப்பட்ட உத்தரவாத ஓய்வூதிய திட்டம் ஆகும். UPS-ல் ஒன்றிய அரசு ஊழியர் ஓய்வு பெறும் போது கடைசியாக வாங்கிய 12 மாத ஊதியத்தின் சராசரி தொகை, 25ஆண்டு பணி முடித்தவர்களுக்கு 50 விழுக்காடு பென்சன் உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதியம் (ASSURED PENSION) வழங்கப்படும். ANNUITY ஆக கடைசியாக வாங்கும் ஊதியத்தின் பத்தில் ஒரு மடங்கு, ஒவ்வொரு ஆறு மாத பணி காலத்திற்கு வழங்கப்படும். 10ஆண்டு பணி முடித்தவர்களுக்கு ரூபாய் 10000/- குறைந்த பட்ச பென்சன், குடும்ப ஓய்வூதியம் இணையருக்கு அதில் 60 சதவீதம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் Annuity-யில் சேர்ந்துள்ள தொகையில் 60விழுக்காடு பணி ஓய்வு பெறும் போது பெற்று கொள்ளலாம். ஆனால் UPS ல் அது போன்று ANNUITY பெற வழி வகை யில்லை. சிறிய தொகையே Annuity ஆக கிடைக்கும்.

(3) ஆந்திராவில் அறிமுகப்பட்ட GPS-GURANTEE PENSION-ல் உள்ள ஷரத்துக்களின்படி அரசின் பங்கு தொகையை 14 விழுக்காட்டில் இருந்து 18.5 விழுக்காடாக யூபிஎஸ் திட்டம் உயர்த்தி உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் பெரிய தொகை கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளுக்கு செல்ல வழி வகுக்கிறது.

பழைய ஓய்வூதிய திட்டம் என்பது அவ்வப்போது நிகழும் ஊதிய மாற்றம் மற்றும் அகவிலைப்படி உயர்வு காரணமாக உணரக்கூடிய ஓய்வூதியம் ஆகும். கடந்த 20 ஆண்டுகளாக பழைய ஓய்வூதிய திட்டத்திற்காக மட்டுமே போரடிக்கொண்டிருக்கிறோம். ஏனெனில், அது மட்டுமே பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகியவை உயர்ந்த அளவில் வழங்கக்கூடிய ஒன்றாகும். மொத்தத்தில் ஆந்திராவின் உத்தரவாத ஓய்வூதிய திட்டத்தின் மறு பதிப்பே இந்த ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஆகும். நமது தொடர்ச்சியான போராட்டங்கள் விளைவாக பாஜக அல்லாத சில மாநில அரசுகள் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு திரும்பின. பாஜக கொண்டு வந்த புதிய பென்சன் திட்டத்தினை பாஜக ஆதரவோடு சட்ட்மாக்கிய காங்கிரஸ் இராஜஸ்தான், சத்தீஸ்கர், இமாசலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் யு டர்ன் ஆகி பழைய பென்சனுக்கு திரும்பியதும் ஒரு மாற்றமே.. இது ஒரு வகையில் பங்கு தொகையை முதலீடு செய்து லாபம் ஈட்டும் நிறுவனங்களுக்கு சேதாரம் ஏற்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் பழைய பென்சன் திட்டத்தினை மீண்டும் கொண்டு வந்த பஞ்சாப், இராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர் போன்ற மாநில அரசுகள் PFRDA வில் செலுத்திய பென்சன் நிதி யை திரும்ப வழங்க ஒன்றிய அரசு மறுத்து விட்டது. ஆந்திராவின் உத்தரவாத ஓய்வூதிய திட்டம் உட்பட பழைய பென்சன் மீளக் கொண்டு வந்த முடிவினை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதனால் பாஜக அரசு கள் கூட அரசியல் நெருக்கடி க்கு ஆளாகி ஊழியர்களையும் கார்ப்பரேட் நிறுவனங்களையும் திருப்தி படுத்த வேண்டும் என்பதற்காக அறிவிக்கப் பட்டது தான் இந்த யூபிஎஸ் திட்டம்.

(4) சமீபத்திய பாராளுமன்ற தேர்தலில் பாஜக பெரும்பான்மை இழந்து கூட்டணி ஆட்சி அமைக்க கூடிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள சூழலில், அரியானா, ஜம்மு காஷ்மீர், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தலை சந்திக்க நேரிடும் சூழலில், எந்த நேரத்திலும் பாராளுமன்ற தேர்தல் வந்தால் சந்திக்க வேண்டிய சூழலில் மத்தியதர தொழிலாளர் வர்க்கத்தை ஏதாவது ஒரு வகையில் சமாளிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு. பழைய மந்தையில் புதிய கள் என்பது போல NPS க்கு பதிலாக UPS ம் ஊழியர்களிடம் பிடித்தம செய்து ஊழியர்களுக்கு பென்சன் கொடுக்கும் திட்டமே! (5)நம்மை ஏமாற்ற நினைக்கும் தமிழக அரசு:தமிழ்நாடு அரசு இது நாள் வரை PFRDA வில் சேராமல் 1.4.2003 முதல் சிபிஎஸ் ( CONTRIBUTION PENSION SCHEME) திட்டத்தின் மூலம் பணிக்கு வந்தவர்களிடம் இருந்து ஊதியத்தில் பத்து சதமானம் பிடித்து ஓய்வூதியம் வழங்காமல் ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் கொடுத்த பணத்தை அரசின் பங்கு தொகையை சேர்த்து வட்டியுடன் பணப் பலன் மட்டும் ஒரேநேர தீர்வு (ONE TIME SETTLEMENT) என்ற அடிப்படையில் வழங்கி வருகிறது. ஒன்றிய அரசு புதிய பென்சன் திட்டத்தினை 1.1.2004. முதல் அமல் படுத்தியது. அன்றைக்கு இருந்த முதல்வர் ஜெ. ஜெயலலிதா 1.4.2003 முதல் முன் தேதியிட்டு நடைமுறை படுத்தினார். இந்தியா விலேயே கேரளா, திரிபுரா, மேற்கு வங்காள மார்க்சிஸ்ட் கட்சி தலைமையிலான இடது முன்னணி அரசுகள் புதிய பென்சன் திட்டத்தினை கொண்டு வர மாட்டோம் என்று அறிவித்தன. இதையடுத்து, எழுச்சியான இயக்கங்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோஜியோ சார்பில் நடத்தியுள்ளோம். இதனால் அதிமுக, திமுக அரசு மாறி, மாறி வந்தாலும் ஒரே கொள்கையை பின்பற்றி எந்த ஓய்வூதியமும் வழங்காமல் One time settlement scheme ஆக செயல் படுத்தி வருகிறார்கள். 2006, 2011, 2016 மற்றும் 2021 தேர்தல்களில் திமுக, அதிமுக வும் கூட நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும்

பழைய ஓய்வூதியம் கொண்டு வருவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்து வந்தார்கள்.

2016 வரை புதிய பென்சன் திட்டத்தில் இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் பணி ஓய்வு பெற்ற மோசமான நிலையில் தமிழகம் இருந்தது. இந்த நிலையில் தான், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊழியர்களிடம் பிடித்தம் செய்ய பட்ட தொகை எங்கே இருக்கிறது? எவ்வளவு இருக்கிறது? பாதுகாப்பாக இருக்கிறதா? என்ற வினாக்களுடன் புதிய பென்சன் திட்டத்தினை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்க வேண்டும் என 10.2.2016 முதல் 19.2.2016 வரை காலவரையற்ற வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்தது. இந்த பின்புலத்தில், சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் “பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி வல்லுநர் குழு ஒன்று அமைக்கவும், புதிய பென்சன் திட்டத்தில் இருந்தவர்கள் பணி ஓய்வு பெறும் போது ஊழியர்கள் கொடுத்த சந்தா தொகையை அரசின் பங்கு தொகையை வட்டியுடன் சேர்த்து வழங்க வேண்டும் என அறிவிப்பு வெளியிட்டார். மேலும் ஊழியர்கள் பங்கு தொகை ரூபாய் பத்தாயிரம் கோடி பொதுக் கணக்கில் இருக்கிறது என்று நிதி அமைச்சர் சொல்ல வைக்கவே போராட வேண்டியதாயிற்று. அதன் பின்னர் திருமிகு. சாந்தா ஷீலா நாயர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அவர் ராஜினாமா செய்த பிறகு திரு. டி. எஸ். ஸ்ரீதர் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்படி குழு தலைவர் மாற்றம், குழு உறுப்பினர் மாற்றம், குழு பணிக்காலம் நீட்டிப்பு இப்படி திட்டமிட்டு தமிழ்நாடு அரசு நம்மை ஏமாற்றி வந்தது.

2017-ல் செப்டம்பர் 9 முதல் 15-ந் தேதி வரை ஜாக்டோ - ஜியோ சார்பில் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டோம். செப்டம்பர் மாதம் 7-ந் தேதி மதுரை உயர்நீதிமன்ற கிளையில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. அதையும் மீறி போராட்டம் நடத்தி செப்டம்பர் மாதம் 15ந்தேதி வழக்கு விசாரணைக்கு வந்த போது தலைமை செயலாளர் அடுத்த விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் எனவும், 15.9.2017 மதியம் 2 மணிக்கு ஊழியர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் எனவும் உத்தரவிட்டு வழக்கை 22.9.2017 க்கு அடுத்த விசாரணையை ஒத்தி வைத்தது. இதையடுத்து 22.9.2017 அன்று நடைபெற்ற வழக்கு விசாரணையில் தலைமைச் செயலாளர் ஆஜரான போது 13.2017 க்குள் ஊதியக்குழு பரிந்துரைகளை அமல் படுத்த வேண்டும் அல்லது இடைக்கால நிவாரணம் வழங்கிட வேண்டும். தவறினால் நீதிமன்றமே அமல்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும், வேலை நிறுத்த காலம் பணிக் காலமாக மாற்றி அதற்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும் எனவும், அந்த நாட்களை அரசு விடுமுறை நாட்களில் பணியாற்றி சரி கட்ட வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டதால் வேலை நிறுத்தம் விலக்கி கொள்ள பட்டது. நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான தலைமைச் செயலாளர் நவம்பர் மாதம் 30-ந், தேதிக்குள் சிபிஎஸ் குழுவின் அறிக்கை பெறப்பட்டு அதன் மீதான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என வாக்குறுதி அளித்தார். இதன்படி ஊதிய மாற்றம் அறிவிக்கப்பட்டது

பழைய ஓய்வூதியம் வழங்க போடப்பட்ட வல்லுநர் குழு அறிக்கை முடிவை பரிந்துரைகளுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டனர். வல்லுநர் குழு பரிந்துரை கோர்ட்டில் தாக்கல் செய்ய பட்டது. இன்று வரை அந்த அறிக்கையில் உள்ளது என்பதை கூட கடந்த ஆட்சியில் வெளியிட வில்லை. திமுக அரசும் வெளியிடவில்லை. அதிமுக அரசு அந்திம காலத்தில் முதல்வர் எடப்பாடி பழைய பென்சன் திட்டம் சாத்தியம் இல்லை என்று சொல்லி விட்டார். அதிமுக ஆட்சியில் பழைய பென்சன்

பெறுவதற்கான போராட்டத்தில் நமக்கு ஆதரவு தெரிவித்து, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பழைய பென்சன் திட்டத்தினை மீண்டும் கொண்டு வருவோம் என களத்தில் உறுதி மொழி வழங்கியவர் தான் இன்றைய முதல்வர்.

2021 சட்டமன்றத் தேர்தலில் திமுக ஆட்சி அமைத்தால், பழைய பென்சன் திட்டத்தினை மீண்டும் கொண்டு வருவோம் என தேர்தல் வாக்குறுதி அளித்தார். திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதல்வரை அழைத்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோஜியோ சார்பில் இரண்டு மாநாடுகள் நடத்தி ஆறு லட்சம் பேர் உள்ள புதிய பென்சன் திட்டத்தினை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தினை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று ஊழியர்களின் உணர்வுகளை உணர வைத்தோம். தனியாகவும், கூட்டாகவும் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். அதன் காரணமாக மூன்று அமைச்சர் குழு பேச்சு வார்த்தை இரண்டு முறை நடந்தது. நான்கு முறை முதல்வரை சந்தித்து 60000 ஊழியர்கள் ஓய்வூதியம் இல்லாமல் பணி ஓய்வு பெற்றுள்ளார் கள் என்பதை கவலையுடன் அவரிடம் சொல்லி இருக்கிறோம். அமைச்சர் குழு பேச்சு வார்த்தையில் வல்லுநர் குழு மற்றும் ஒன்றிய அரசு சோமநாதர் அறிக்கை க்காக காத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பின்னர் ஆந்திராவின் உத்தரவாத ஓய்வூதிய திட்டத்தினை பரீசிலித்து வருவதாக நிதித் துறையின் செயலாளர் சொல்லி வந்தார். இன்னும் காலம் இருக்கிறது கவலைப்பட வேண்டாம் என்று ஆசை வார்த்தை கூறினார்கள். பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு முதல்வர் நான் தானே முடிவெடுக்க வேண்டும் நிச்சயமாக நிறைவேற்றுவேன் என சொன்னார். இப்படி 40 மாத காலம் ஆட்சியாளர்களை நம்பி ஏமாற்றப்பட்டுள்ளோம். இந்த நேரத்தில் ஒன்றிய அரசு ஒரு படி மேலே சென்று யூபிஎஸ் திட்டம் அறிவித்துள்ளது.

எங்கள் கோரிக்கையும், திமுக வின் வாக்குறுதி பழைய ஓய்வூதியம் மட்டுமே. இது எங்களது கோரிக்கை மட்டும் அல்ல திமுக தொழிற்சங்க மான தொமுச வைக்கும் கோரிக்கையும் அதுவே. சமூக நீதி, மதச்சார்பற்ற கொள்கை, அரசியல் சாசன பாதுகாப்பு, மாநில சுயாட்சி போன்ற கொள்கைக்கான திமுகவின் போராட்டத்தில் மானசீகமாக உங்களோடு போராடிக்கொண்டிருக்கும் அரசு ஊழியர் ஆசிரியர் வர்க்கத்தின் வாழ்வாதாரம் காக்க பழைய ஓய்வூதியம் திட்டம் மீண்டும் கொண்டு வர பேச்சு வார்த்தையை தொடங்கி வையுங்கள். பழைய ஓய்வூதியம் வழங்க முடிவெடுங்கள்! இனி ஒரு தாமதம் தேவையில்லை. வலுவான போராட்டத்தை எங்கள் மீது திணிக்காதீர்கள்! போராட்டங்கள் தவிர்ப்பது அரசின் கைகளில்! அரசு ஊழியர் ஆசிரியர் இயக்கம் போராட்டத்தின் பின்புலத்தில் அரசியல் மாற்றம் நிகழ்ந்த வந்துள்ளது. அப்படித்தான், உங்களையும் ஆட்சி கட்டிலில் அமர்த்தி இருக்கிறோம். இது வெறும் வார்த்தை மட்டும் அல்ல அரசு ஊழியர் இயக்கத்தின் வரலாறு. கொடுத்த வாக்குறுதி பொய்த்து போனால், வாக்குறுதியை நிறைவேற்ற போராட்ட களம் காண்போம். ஏறி வந்த ஏணியை எட்டி உதைத்து விடாதீர்கள்! பழைய பென்சன் காத்திட களம் காண்போம்! நிச்சயம் வெற்றி பெறுவோம்! பென்சனை மீட்டெடுப்போம்! வீரச்சமர் புரிந்து வீர வரலாறு படைப்பது நமக்கு புதிதல்ல! மீண்டும் புதிய வரலாறு படைக்க தயாராவோம்!.

**“போராடி பெற்ற வற்றை,**
**போராடி மீட்க வேண்டும்.**
**போராடி மீட்டவற்றை,**
**போராடி காக்க வேண்டும்,**
**போராடும் வழியை விட்டால்,**
**வேறென்ன வழி நமக்கு,**
**விடியல் காண்பதற்கு !**

**– தணிகைச் செல்வன்**

# வாசகர் கடிதம்

ஆசிரியர் குழுவுக்கு வணக்கம்.

ஆகஸ்ட் மாத அரசு ஊழியர் இதழ் நீண்ட நெடிய மாதங்களுக்கு பின் தலையங்கம் தலைப்பு வந்துள்ளது. ஆசிரியர் குழுவிற்கு வாழ்த்துக்கள் பாராட்டுக்கள். எந்த பிரசுரமாக இருந்தாலும் அதன் ஆசிரியர் குழுவின் கருத்தை வாசகனுக்கு கொடுப்பது பத்திரிகைகளின் நியதி அதனை அரசு ஊழியர் இதழ் மீண்டும் கொண்டு வந்துள்ளது வரவேற்கத்தக்கது .தலையங்கம் மிகச் சரியாக இந்த அரசின் மீது சாட்டையை வீசியுள்ளது நாம் வீறு கொண்டு எழுவோம்.

பொதுச் செயலாளர் பட்ஜெட் குறித்த விமர்சனம் மிகச் சரியானது இந்த பட்ஜெட் மக்களுக்கு எதிரானது மாணவர்களுக்கு எதிரானது விவசாயிகளுக்கு எதிரானது தொழிலாளர்களுக்கு எதிரானது இளைஞர்களுக்கு எதிரானது என பகுப்பாய்வு செய்துள்ளார். இதை படித்த பின்பாவது பிஜேபி ஆதரவு மனநிலை கொண்டவர்கள் நாம் வைத்திருக்கும் கோரிக்கையின் பால் மாற வேண்டும் .ஏ. நிசார் அகமது அவர்கள் நமது அமைப்பின் முன்னாள் மாநில செயலாளர். தோழர் எம்.ஆர்.ஏ. குறித்து நூல் எழுதியவர். சரியான நேரத்தில் சரியான பதிவு கட்டுரையை படித்தவர்கள் நிச்சயம் ஏக்க பெருமூச்சு விடுவார்கள். தலைவர்களை வளர்த்த தலைவர் தோழர் எம்.ஆர்.ஏ. தொழில்நுட்ப வளர்ச்சியும் ஸ்தாபனத்தில் தாக்கங்களும் என்ற கட்டுரையை இன்றைய கால சூழலை அப்படியே கண்ணாடி போல் பிரதிபலிக்க செய்துள்ளார் கட்டுரையாளர் .ஸ்தாபனத்தில் தாக்கம் என்பதை தேக்கமும் என்று கூறியிருக்கலாம். அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வாசலாக உள்ளது.

“எதிரிகள் எதிர்ப்படும் நேரங்களில் மட்டுமல்ல .....

சுகமாகஓய்வுக்கும்கூட கூட்டுக்குள்ளையே

தம்மை இழுத்துக் கொள்கின்றன.....

அற்புதமான கவிதை வரிகள். எதிரிகள் என்ற ஒற்றைச் சொல்லில் எல்லாமே அடக்கம் நத்தைகள் என்றுமே மண்ணிற்கு உரம் தான் மனித சமூகத்திற்கு உரமாக அன்றும் இன்றும் என்றும் நத்தையில் முத்துக்கள்.

ஆர். நடராஜன் அவர்களின் பட்ஜெட் 2024 கட்டுரைகள் மாற்றுத் திட்ட கோரிக்கைகளை முன் வைத்துள்ளது நமது போராட்டத்தில் யாருக்கான அரசாக உள்ளது என்பதை பிரச்சாரத்திற்கு பயன்படுத்தலாம். நமக்கான அரசியலை பேசுகிறது.இரா. மங்கள பாண்டியன் அவர்களின் கட்டுரை.

ஒளி மங்கிய வைரம் பிரகாசிக்கட்டும்

போராட்டம் மாறாது கட்டுரையில்

ஸ்தாபன பலத்திற்கும் போராட வேண்டியுள்ளது என்பதை கட்டுரை யார் சுட்டிக் காட்டியுள்ளார்.களமும் அவ்வாறே உள்ளது.

**–ம. அந்தோணிசாமி**

---

2024 ஒன்றிய அரசின் பட்ஜெட் ஏமாற்றங்கள் குறித்த பொதுச் செயலாளர் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பல்வேறு புள்ளிவிவரங்கள் , துறைவாரியாக பட்ஜெட் நிதி ஒதுக்கீடு குறைப்பு குறித்த புள்ளிவிவரங்கள் பயனுடையது. பல்வேறு இடங்களில் எழுத்து பிழைகள் உள்ளன.

தோழர் நிசார் அகமது எழுதிய எம் ஆர் அப்பன் ஓர் துருவ நட்சத்திரம் கட்டுரை, தோழர் ஆர்எம்எஸ் குறித்து கட்டுரை மற்றும் முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் மு.அன்பரசு எழுதிய கட்டுரைகள் ஒவ்வொரு நிர்வாகிகளும் படித்து நாம் பின்பற்ற வேண்டிய அறிவுரைகள், நமக்கான வழிகாட்டும் தகவல்கள். நமது ஆசான்களை போல் இன்னும் பல தலைவர்கள் வரவேண்டும். ஒன்றிய அரசின் மக்கள் மீதான தாக்குதல் குறித்த தோழர் மங்களபாண்டியன் கட்டுரை மிக தெளிவாக அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு நிதி ஒதுக்கீடு குறைப்பு, மக்கள் மீதான தாக்குதல் கருத்துக்கள் நன்று.

தோழர் பாஸ்கரன் நமது சங்கத்தின் அடிப்படை பணியான உறுப்பினர் சேர்க்கை கட்டுரை நன்று.

களம் மாறும் கைமாறும்..... தோழர் ஹேமலதா கட்டுரை எழுச்சிமிக்கது. ஊழியர்கள் அனைவரும் படிக்க வேண்டிய ஒரு தொகுப்பு இந்த மாத இதழ். மாநில மையத்தின் ஆசிரியர் குழுவிற்கு பாராட்டுக்கள்.

இந்த சங்கத்தினை மேலும் பலப்படுத்த வேண்டும். நாம் இழந்த உரிமைகளை வென்றெடுக்க மாணிக்க ஆண்டு கண்ட

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற அமைப்பால் மட்டுமே முடியும். இணைந்து செயல்படுவோம். கோரிக்கைகளை வென்றேடுப்போம்.

**–முனைவர் கா. பால் பாண்டி**

# எம்ஆர்ஏ மூன்றெழுத்து மந்திரம் உச்சரித்தால் உஷ்ணம் பிறக்கும்



**போராட்ட குணம் நம்மை**
**தொற்றிவிடும்**
**தனி மனிதனல்லடா நீ**
**கோடிக்கால் பூதம் என**
**உணர்த்தியவன் நீ**
**மார்க்சிய பட்டறையில்**
**வார்க்கப்பட்ட போர் வாள் நீ**
**பொது உடமைப் பூங்காவில்**
**பூத்த சிந்தனை மலர் நீ!**
**தாயின் அரவணைப்பும்**
**தந்தையின் கண்டிப்பும்**
**ஒரு சேரக் கலந்த அற்புதக்**
**கலவை நீ!**
**அரசு ஊழியர் ஆசிரியர்**
**ஒற்றுமை களர் நிலமாய்**
**இருந்த தமிழகத்தில் ஒற்றுமை**
**நீர் பாய்ச்சி நெடு வயல்**

நிறையக் கண்ட நமது சங்கத்தின் மேனாள் தலைவர் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கௌரவ தலைவர் தோழர் எம்ஆர் அப்பன் நினைவு நாள் கருதத்தரங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் விரிவடைந்த செயற்குழு கூட்டம் 31.08.2024 அன்றுமணிக்கு எம் ஆர் அப்பன் இல்லத்தில் மாவட்டத் தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தோழர் சி.அ. பாபு வரவேற்புரையாற்றி, சங்கத்தின் கடந்த கால நிகழ்வுகள் குறித்து எடுத்துரைத்தார்.

அலங்கரிக்கப்பட்ட தோழர் ஆசான் எம்.ஆர்.அப்பன் நிழற்படத்திற்கு அனைவரும் மலர் தூவி மரியாதை வீரவணக்கம் செலுத்தினார்கள். மாவட்டத்தலைவர் சங்கத்தின் நடவடிக்கைகள், எதிர்கால திட்டமிடல், உறுப்பினர் சந்தா சேகரிப்பு, மாநில மையத்திற்கு செலுத்த வேண்டிய நாட்குறிப்பு நிலுவைத் தொகை, மாவட்ட மையத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ காப்பீடு உதவிகள், மருத்துவ உதவிகள், வட்டக்கிளை மாநாடு, மாவட்ட மாநாடு, சங்க கட்டடத்தின் தரை தளம் அமைத்தல் குறித்து பேசினார்.

மாவட்டத் துணை தலைவர்கள் தோழர் ஜீவானந்தம், வெங்கடேசன், வட்டக்கிளை நிர்வாகிகள் சசிகலா, சரிகா, தினகரன், சண்முகம் உள்ளிட்ட நிர்வாகிகள் பேசினார்கள்.

தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதிய சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் மதிவாணன், முன்னாள் நிர்வாகிகள் தோழர் முருகேசன், தோழர் சுப்பிரமணியம், தோழர் சுந்தர்ராஜ், தோழர் மனோகரன் பேசினார்கள்

எம்ஆர் அப்பன் ஒரு துருவ நட்சத்திரம் என்ற தலைப்பில் ஆசானின் பல்வேறு நிகழ்வுகள், நினைவுகள், போராட்டங்கள், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் நிகழ்வுகள், சந்தித்த சவால்கள் உள்ளிட்டவை குறித்து தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் எம்வி செந்தமிழ் செல்வன் கருத்துரையாற்றினார்.

அனைத்து துறை ஊழியர்கள், அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள், வளாக கிளை நிர்வாகிகள், தோழமை சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை முன்னணி ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

சி.அ.பாபு, மாவட்டச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

# கொல்கத்தா முதுநிலை மருத்துவ மாணவி படுகொலையை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்

**திருவாரூர்**

திருவாரூர் அரசு ஊழியர் சங்கம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் 02/09/24

கொல்கத்தாவில்பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதை கண்டித்து அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டம் சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்டத் தலைவர் எஸ்.செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது முன்னாள் மாநிலச் செயலாளர் எம். சௌந்தராஜன் துவக்கரை ஆற்றினார் மாவட்டச் செயலாளர் செ.பிரகாஷ் நடந்த நிகழ்வுகளை பகிர்ந்து கண்டன உரையாற்றினர் மகளிர் துனைக்குழு அமைப்பாளர் டி.தமிழ்சுடர் கிராம சுகாதார செவிலியர் சங்க நிர்வாகி பி.பரமேஸ்வரி உள்ளிட்ட துறை வாரி சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் கண்டன உரை ஆற்றினார்

நிறைவாக மாநில துணைப் பொதுச் செயலாளர் வெ.சோமசுந்தரம் நிறைவுரையாற்றினர்

மாவட்ட பொருளாளர் வீ.தெட்சிணாமூர்த்தி நன்றி கூற கண்டனம் ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது

**கிருஷ்ணகிரி**

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவமனையில், முதுநிலை 2 ஆம் ஆண்டு மருத்துவம் பயின்ற வந்த மாணவி ஆகஸ்டு 9ஆம் தேதி இரவு பாலியல் வன்கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த கொடுஞ் செயலை கண்டிக்கின்ற வகையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அறைகூவலுக்கிணங்க மாவட்ட தலைநகரில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் தோழர். பி.சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர். சி.கல்யாணசுந்தரம் கோரிக்கை விளக்க உரையாற்றினார்.

தோழர்.K.கோபாலகண்ணன்,மாவட்ட செயலாளர், த.நா.ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம், தோழர்.K.தேவிசோனா, மாவட்ட செயலாளர், த.நா. கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம், தோழர்.K.C.A.தினேஷ், மாநில து.தலைவர், பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கம், தோழர். R.M.மஞ்சுளா, மாநில து.தலைவர், த.நா.சத்துணவு ஊழியர் சங்கம், தோழர். K.கனகவள்ளி, மாவட்ட பொருளாளர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், தோழர். K.ஜெகதாம்பிகா மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர், தோழர்.ராதா, மாவட்ட செயலாளர், இந்திய ஜனநாயக மாதர் சங்கம், தோழர்.C.கோவிந்தராஜ், மாவட்ட தலைவர், த.நா.கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம், தோழர். K.பெருமாள், மாநில செயலாளர், த.நா. அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம், தோழர். T.உதயபானு, மாவட்ட பொருளாளர், தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம் ஆகியோர் கண்டன உரையாற்றினார். நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் மாநில தணிக்கையாளர் தோழர். R.நடராஜன் அவர்கள் கண்டன நிறைவுரையற்றினார்.

இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர். எம். நந்தகுமார் அவர்கள் நன்றி கூறி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.

**இராமநாதபுரம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட தலைவர் தோழர் மா.முருகேஸ்வரி அவர்கள் தலைமையில் முதுநிலை பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டது கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.ரோஸானா

பேகம், MRB மேம்பாட்டு செவிலியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர். வினோதினி தமிழ்நாடு அங்கன்வாடி சங்க மாவட்ட செயலாளர் தோழர் மல்லிகா ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில், TNGEA நிர்வாகிகளும் தோழமை சங்க நிர்வாகிகளும், 50க்கும் மேற்பட்ட பெண் தோழர்களும் திறனாக கலந்து கொண்டனர். இறுதியில் மாவட்ட பொருளாளர் தோழர் அப்துல் நஜ்முதீன் நன்றி கூறினார்.

**திண்டுக்கல்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்டம் மையத்தின் சார்பாக திண்டுக்கல் மாவட்ட இணை இயக்குனர் மருத்துவ பணிகள் அலுவலகம் முன்பு நடைபெற்ற மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில்

மாவட்ட தலைவர் ச.முபாரக் அலி தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் ம.சுகந்தி கோரிக்கைகளை பேசினார் கண்டன உரையாக ஏ.ஜெசி மாநில செயலாளர் சத்துணவு ஊழியர் சங்கம் இரா.கல்பனா மாநில செயலாளர் தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கம் இரா.ஜெயக்கொடி மாவட்ட இணை செயலாளர் மருத்துவ துறை நிர்வாக ஊழியர் சங்கம் எம் .மீனாம்பிகை மாவட்ட இணை செயலாளர் நில அளவை அலுவலர் ஒன்றிப்பு சி எஸ். ரோஸ்தனம் எம் ஆர் பி மேம்பாட்டு சங்கம் அ.அமுதராணி மகளிர் அணி கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம் ஆகியோர் பேசினர். இறுதியாக மாவட்ட இணை செயலாளர் டி.மகாலிங்கம் நன்றி கூறினார்

**விழுப்புரம்**

மேற்குவங்க மாநிலம், கொல்கத்தாவில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஆர்.ஜி.கர் மருத்துவ முதுநிலை மாணவியின் மரணத்திற்கு நீதி கேட்டும், கொடிய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து பாரபட்சமற்ற வகையில் விசாரணை செய்து விரைவாக தண்டனை பெற்று தர வேண்டும் எனவும் வலியுறுத்தி அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் முன்பாக மாவட்டத் தலைவர் தோழர் கு.சரவணன் தலைமையில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் 02/09/2024 திங்கட்கிழமை மாலை 05.45 முதல் 07:00 மணிவரை நடைபெற்றது.

மாவட்ட தணிக்கையாளர் தோழர் ர. சுதாகர் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட இணை செயலாளர் தோழர் இரா. சிவக்குமார் ஆர்ப்பாட்ட விளக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் அ.மணிமாறன், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட துணைத் தலைவர் தோழர் மே.சாருமதி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தி.ஜெயந்தி, தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மாவட்ட தலைவர் தோழர் எம்.மகேஸ்வரன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

இந்திய தொழிற்சங்க மைய மாநிலச் செயலாளர் தோழர் ஆர்.மூர்த்தி நிறைவுரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு சுகாதாரப் போக்குவரத்து ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் அ.அஜிஸ், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் ஜெ. ரமேஷ், தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் றி.வி.சுந்தரம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்டக் கிளை நிர்வாகிகள் தோழர்கள் இரா.விஜயகுமார் (திண்டிவனம்), திருமாவளவன் (விழுப்புரம்), குபேரன், ப.திருவேங்கடம், க.மனோகரன் (செஞ்சி), தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் டி. ஜானகிதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட பொருளாளர் தோழர் க.அன்பழகன் நன்றியுரை நிகழ்த்தினார்.

### வடசென்னை – தென்சென்னை

கொல்கத்தாவில் முதுநிலை பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து இன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் மாலை 5:30 மணிக்கு நடைபெற்றது இதில் வட சென்னை மாவட்ட தலைவர் தோழர் விஜயகுமாரன் தலைமை ஏற்று நடத்தினார், வடசென்னை மாவட்ட செயலாளர் தோழர் அந்தோணிசாமி , தென்சென்னை மாவட்ட செயலாளர் தோழர் முத்துகுமாரசாமிவேல், தென்சென்னை மாவட்ட துணைத்தலைவர் தோழர் அஸ்வினி, மாநில துணைத்தலைவர் செல்வராணி மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர் டேனியல் ஜெய்சிங் கண்டன உரையாற்றினார் வடசென்னை மாவட்ட பொருளாளர் தோழர் ஏழுமலை நன்றி தெரிவித்தார்

### திருச்சி

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின் அடிப்படையில் மேற்குவங்க தலைநகர் கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரவு பணியில் இருந்த முதுநிலை பயிற்சி பெண் மருத்துவர் கடந்த ஜூலை 9ஆம் நாள் கும்பல் பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்*

இந்த கொடூர செயலை கண்டித்து நாடுதழுவிய அளவில் மாணவர், மாதர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பாக பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தி மிக எழுச்சியான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கொலை செய்த குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும். படுகொலை செய்யப்பட்ட மருத்துவ மாணவிக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி *செப்டம்பர் 02.09.2024 (திங்கட்கிழமை) தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் மெழுகுவர்த்தி ஏந்தி இயக்கம் (candle light programme) நடத்திட அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக 02.09.2024 திங்கட்கிழமை மாலை 5.45 மணிக்கு மெழுகுவர்த்தி ஏந்தி நீதி கேட்கும் போராட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணைத் தலைவர் தோழர் வெங்கடேசன், மாவட்ட இணைச் செயலாளர் அமுதவல்லி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மாவட்டச் செயலாளர் பாபு கோரிக்கை விளக்கவுரையாற்றினார். அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் செந்தமிழ் செல்வன், அகில இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் வி.ரங்கராஜன், அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சரஸ்வதி, தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் ராமலட்சுமி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் அமுதா, தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க நிர்வாகி பாரதி, தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பிரகாஷ், மாவட்டச் செயலாளர் பொன்மாடசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். மாநில துணைத் தலைவர் பெரியசாமி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சிவ்சங்கர் நன்றி கூறினார்.

போராட்டத்தில் அனைத்து துறை தோழர்கள், அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட, வட்டக்கிளை, வளாக கிளை நிர்வாகிகள் தோழமை சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் உணர்வுப்பூர்வமாக கலந்து கொண்டார்கள்.

### மதுரை

கொல்கத்தாவில் முதல்நிலைப் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மெழுகுவத்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் 02.09.2024 திங்கட்கிழமை 5.30 மணிக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் ஜெ. மூர்த்தி

தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் க. நீதி ராஜா கோரிக்கை விளக்கவுரையாற்றினார் மாவட்ட துணைத் தலைவர்கள் பெ. சந்திரபாண்டி ஜெ. மகேந்திரன் மாவட்ட இணைச் செயலாளர் பரமசிவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் சி. க. சுஜாதா தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சு. கிருஷ்ணன் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் சு.பாண்டிச்சேரி தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநில செயலாளர் மு.ஆனந்தவள்ளி தமிழ்நாடு நகராட்சி மாநகராட்சி சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில தலைவர் மு.பஞ்சவர்ணம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆ.செல்வம் நிறைவுறையாற்றினார். மாவட்ட பொருளாளர் கா.சந்திரபோஸ் நன்றி கூறினார்.

**தர்மபுரி**

கொல்கத்தா மருத்துவக் படுகொலையை கண்டித்து மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் தருமபுரி ஆக2, கொல்கத்தா பெண் முதுநிலைப்பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமைவகித்தார்

## வட்டக்கிளை மாநாடு



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தஞ்சாவூர் வடக்கு வட்ட மாநாடு 17.08.2024 அன்று தஞ்சாவூரில் வட்ட தலைவர் தோழர் M.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வட்ட துணைத்தலைவர் தோழர் P.சதீஷ்குமார் வரவேற்புரையாற்றினார், வட்ட இணை செயலாளர் தோழர் D.மூர்த்தி அஞ்சலி தீர்மானம் வாசித்தார், மாவட்டத்தலைவர் தோழர் B.முருகன் வட்ட மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார், வட்ட செயலாளர் தோழர் C.அஜய்ராஜா செயலாளர் அறிக்கையினையும், வட்ட பொருளாளர் தோழர் J.பலராமன் வரவு செலவு அறிக்கையினையும் வைத்தனர். உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பிறகு அறிக்கைகள் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாவட்ட துணைத்தலைவர் தோழர் A.R.கவிதா, தமிழ்நாடு நகராட்சி மாநகராட்சி அலுவலர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தோழர் P.மதிவாணன், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் K.பழனிச்சாமி, தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் தோழர் P.பார்த்தசாரதி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் T.ரவிச்சந்திரன், தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் K.முருகானந்தம், தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை பணிமன்றத்தின் மாநிலத் தலைவர் தோழர் P. அம்பேத்கார், கும்பகோணம் வட்டச் செயலாளர் தோழர் பிரபாகரன், தஞ்சை தெற்கு மாவட்ட தலைவர் தோழர் T.R.சங்கர்கணேஷ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட செயலாளர் தோழர் A. ரெங்கசாமி சிறப்புரையாற்றினார், மாநிலச் செயலாளர் தோழர் S.கோதண்டபாணி நிறைவுறையாற்றினார், வட்டத்துனைத் தலைவர் தோழர் J.P. லதா நன்றி கூறினார்.